SEP — DEC

புரட்டாதி -
மார்கழி 1979

# சுகநலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 989

# கமநலம்

மலர் 6
இதழ் 3-4
1979

**கமக்காரர்களின் மத்தியில் தன்நம்பிக்கையையும், மன ,உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பூரண பங்கெடுத்து, அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுப்படுத்தி நிரந்தரமானதொன்றுக்கிக்கொள்ள இச்சஞ்சிகை உதவும்.**

*கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் காலாண்டு வெளியீடு.*

## பொருளடக்கம்

பக்கம்

2. சர்வதேச சிறுவர் ஆண்டு
5. இலங்கையின் இளைய தலைமுறை
7. சிறுவர் சமுதாயத்திற்கு நீங்கள் எவ்வாறு உதவலாம்?
10. மாணவர் எமது நிறுவனத்தின் அதிதிகள்
12. சிறுவர் ஆண்டின் நோக்கம்
15. குழந்தைகளைப் பராமரிக்கும் நல்ல முறைகள்
20. இலங்கையின் சுபிட்சத்திற்கான வேலைத் திட்டங்கள்
27. கமத்துறையில் இளைஞர் பங்கு
33. கேகாலை மாவட்டத்தில் வாழைச் செய்கை



அட்டைப்படம்:

குழந்தைகள் ஆண்டை நினைவுபடுத்த இங்கு சில குழந்தைகள் படங்களைக் காண்கிறீர்கள்

*புகைப் படம்; சாந்த வீரசிங்க*

**விலை ரூபா. 1.50**

**வருடசந்தா ரூபா 5.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சிறுவர் ஆண்டு

**ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, 1976 டிசெம்பர் மீ 21 ஆந் திகதியன்று, 1979 ஆம் ஆண்டை சர்வதேச சிறுவர் ஆண்டாக பிரகடனப்படுத்த வேண்டு மென்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இதற்குமுன் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் தனிப்பட்டவர் சிலர் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனுக உருவாகியதே இத்தீர்மானமாகும். அதன் பின்னர் இந்நோக்கத்திற்கு அரசுகளும், தாபனங்களும், தனிப்பட்டவர்களும் ஒத்துழைப்பு நல்கினர். உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் கேந்திரத்தானத்தில் சிறுவர்களை வைத்து அவர்களின் இன்றைய நிலையையும், அவர்களின் எதிர்காலத்திற்காக எடுக்கப்பட வேண்டிய முயற்சிகளையும் பற்றி அதிக கவனத்துடன் செயலாற்ற மக்களை ஊக்குவிப்பதே இத்தீர்மானத்தின் இலட்சியமாகும்.**

தற்பொழுது சர்வதேச ரீதியில், அபிவிருத்தி, பொருளாதார ஒத்துழைப்பு குறித்து அதிக சிரத்தையுடன் செயலாற்றப்பட்டு வந்தபோதிலும், இன்னுமொருதறையிலே அதாவது சிறப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும், மற்றநாடுகளிலும், சிறுவர்கள் பெருந் தொகையானோரின் வாழ்க்கைக்கு தேவைப்படும் அத்தியாவசிய தேவைகள் தானும் கிடைக்காமலிருக்கின்றனர் என்பதை நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். இந்த நிலைமை சதா காலமும் நிலவவேண்டியதொன்றன்று.

உலகெங்கணும் வாழும் சிறுவர்கள் அவர்கள் வாழும் சமுதாயத்திற்கு தேவைப்படும் நடவடிக்கைகளில் பூரணமாகப் பங்குபற்ற, அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட சந்தர்ப்பத்தைப் பெற்றுத்தர பல வழிகளுண்டு.

## சிறுவர் ஆண்டின் கருத்து

சர்வதேச சிறுவர் ஆண்டு சகல நாடுகளிலுமுள்ள எல்லா சிறுவர்களையும் உள்ளடக்கியுள்ளதுடன் விசேடமாக சூழ்நிலைகள் பற்றிய கவனத்தை ஈர்க்கின்றது. இதன் பிரதான நோக்கங்களாவன:

(அ) வறிய நாடுகளிலும், செல்வ நாடுகளிலும் வாழும் சிறுவர்களின் நலம் பேணி செய்யப்படும் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு அளித்தலும், ஒவ்வொரு நாட்டினதும் நிலைமைகளுக்கேற்பவும், தேவைகளுக்கிணங்கவும், முன்னிடமளிப்பதற்கிணங்கவும் தேசிய பிராந்திய நடவடிக்கைகளுக்கு உதவி பெறுதல்;

(ஆ) தீர்மானங்களை எடுப்பவர்களிடையிலும், பொது மக்களிடையிலும் சிறுவர்களின் விசேட தேவைகள் சம்பந்தமான விசேட அறிவையும், விளக்கத்தையும் ஏற்படுத்தல்;

(இ) ஒரு புறத்தில் சிறுவர்கள் சார்பாக எடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கும், இன்னொரு புறத்தில் பொருளாதார சமுதாய அபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்திக்கு மிடையில் நெருங்கிய காத்திரமான சம்பந்தம் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்துவித்தல்;

(ஈ) தேசிய மட்டத்தில், சிறுவர்களின் நன்மைக்கான குறுகியகால, நீண்டகால இலக்குகளை எய்துவதற்கு நிச்சயமானதும், நடைமுறைச்சாத்தியமானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;

இந்த ஆண்டு சிறுவர்களின் தேகாரோக்கியத்தை வளர்ப்பதற்கு மேலதிகமாகஅவர்களின் அறிவு, உளவிடல்,சமுதாய வளர்ச்சியை எற்படுத்தலின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்ட பயன்படுத்தப்பட்டது.

1979 இல் சிறுவர் உரிமை பற்றி உரிமைச் சாசனம் பிரகடனப் படுத்தப்பட்டு இருபது ஆண்டுகள் கழிந்திருப்பதால், சர்வதேச சிறுவர் ஆண்டு ஒவ்வொரு நாட்டிலும் அந்த உரிமையைச் செயற்படுத்த சந்தர்ப்பத்தையும் பெற்றுத்தருகின்றது.

நல்ல வாழ்க்கைக்கு உரிமை கோரமுடியாதிருக்கும் சிறுவர் விசேட கவனஞ் செலுத்தப்படவேண்டியிருக்கிறது. இதில் சம்பந்தப்படும் சிறுவர் கூட்டத்தில், பாரபட்சமாகக் கவனிக்கும் இளம் சிறுமிகள், சேரி வாசிக் குழந்தைகள், இம்சைகளுக்கு உள்ளாகும் சிறுவர்கள், அநாதைகளாக விருக்கும் குழந்தைகள், பராமரிடபுத் தேடிச் செல்லும் விவாகமாகாத பெண்களின் குழந்தைகள், வறிய கிராமச் சிறுவர்கள், குற்றச் செயல்களிலும், போதை வஸ்துகளிலும் பழக்கப்பட்ட சிறுவர்கள், உடல் உளவலுவிழந்த அங்கவீனச் சிறுவர்கள், மந்த போஷாக்கினால் வருந்தும் பெருந்தொகையான சிறுவர்கள் எல்லோரும் அடங்குவர்.

தேசியமயமானது, பிராந்திய ரீதியானதுமான நடைமுறை வேலைகளுக்கு முன்னிடமளிக்கும் அதே வேளையிலே, சர்வதேச சிறுவர் ஆண்டிலே குழந்தைகளின் தேவைகள், குழந்தைகள் சம்பந்தமான பிரச்சினைகள் என்பனவை பற்றி ஆய்வு நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

## குறுகிய கால வேலைத்திட்டம்

இவ்வாண்டின் பிரதான முயற்சியாக நீண்டகாலமும், தொடர்ந்து இயங்கவேண்டியதுமான வேலைத் திட்டத்துக்குட்படும் சிறுவர்கள் சம்பந்தமான தேசியமயவேலைத்திட்டம் குறித்து இருக்கவேண்டியது அதற்கான குறுகிய கால ஆயத்த முயற்சியாகும். எனவே சகல நாடுகளிலும் இயன்றளவு விரைவில் சர்வதேச சிறுவர் ஆண்டிற்கென தேசிய ஆணைக் குழுவொன்றை நியமித்தல் அல்லது திட்டம் வகுத்தலுக்கும், இணைப்பு வேலையை செய்தற்குமான அத்தகைய தொரு மத்திய நிலையத்தைத் தாபித்தல் அவசியமெனக் கருதப்பட்டதுடன் அதன் மூலம் அமைச்சுகள், தேசிய நிறுவனங்கள், சமூக சேவை நிலையங்கள், சிறுவர் ஆண்டுகுறித்து ஆர்வம் காட்டும் தனிப்பட்டோர் எல்லோரின் ஒத்துழைப்பைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## தேசிய மட்ட நடவடிக்கைகளின் முக்கியத்துவம்

அண்மைக்காலத்தில் நடைபெற்றது போன்று, சர்வதேச சிறுவர் ஆண்டைத் தொடர்பு படுத்தி உலக மநாடு நடத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக ஆரம்பத்திலிருந்தே அத்தகைய மாநாட்டுக்குச் செலவளியும் சக்தியும், பணமும், காலமும், அந்தந்த நாடுகளின் தேசிய மட்டத்தில் சிறுவர்கள் நலன் கருதி எடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு உபயோகிக்கப்பட்டன.

## சர்வதேச சிறுவர் ஆண்டின் செயலகம்

ஐக்கிய நாடுகள் சபையினுள் சர்வதேச சிறுவர் ஆண்டு பற்றிய வேலைகளை ஒன்றிணைக்கும் தாபனமாக சர்வதேச சிறுவர் அவசரகால நிதியம் (யுனிசெப்) நியமிக்கப்பட்டது. இது சம்பந்தமாக விசேட பிரதிநிதி நியமிக்கப்பட்டிருப்பதுடன் அவருக்கு உதவியாக சர்வதேச சிறுவர் ஆண்டு சிறிய செயலக மொன்றும் அங்கு தாபிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவு, பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்களுக்கேற்ப, அவ்வந் நாடுகளின் தேசிய வேலைகளுக்கு ஆதரவைப்பெற்றுத் தரும். அதன் நோக்கங்களை நிறைவேற்று முகமாக சிறுவர் ஆண்டு பற்றி அவ்வந்நாடுகளின் தேசியப் பிரிவுகளுக்கு அவசியமான தகவல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதன் மூலமும், மற்றும் உதவிகளைப் பெற்றுத்தருவதன் மூலமும் ஒத்துழைப்பு நல்கும். இப்பிரிவானது, குழந்தைகள் சம்பந்தமான விடயங்களில் நிபுணத்துவம் பெற்றுள்ள ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்களினதும், அரசுடன் சம்பந்தப்படாத தாபனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும்.

### சிறுவர் ஆண்டின் இலட்சியம்

சிறுவர்களின் நலன்கருதி ஸ்திரமான அடிப்படையிலான சேவைகளின் தரத்தை குறிப்பிடத்தக்க அளவு உயர்த்துவதே சிறுவர் ஆண்டின் பிரதான இலட்சியமாகும். இதனைப் பூர்த்திசெய்துகொள்ள உபயோகிக்கப்படும் பணத்தொகையை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும். ஒவ்வொரு நாட்டினதும் கல்வி, தகவற் சேவை மூலம் மக்களிடையே சிறுவர் பற்றி நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தவும், சிறுவர் வேலைகளுக்கு அவசியமான பண வுதவியை அதிகரிக்கச் செய்யவும், அரசாங்கப் பணிகளை ஊக்குவிக்கவும் இதன் மூலம் முயற்சி எடுக்கப்படுகின்றது.

ஒரு நாட்டின் அல்லது பலநாடுகளின் வேலைத்திட்டங்களின் உதவியளித்தல் சம்பந்தமாக இவ்வேலைத்திட்டங்கள் அமைந்திருத்தல் வேண்டும். உலகின் எல்லாப் பிரதேசங்களிலுமுள்ள அரசுகளும், மக்களும் தாங்களே விரும்பி ஒத்துழைக்கவும், நிதி உதவி மூலமாக நாடுகளிலுள்ள சிறுவர் சேவைத்தாபனங்களுக்கு உதவி செய்யவும் ஊக்கம் காட்டப்படும்.

கைத்தொழில் நாடுகளின் முயற்சியிலும், அவை சேகரிக்கும் நிதிகளிலும் ஒரு பகுதி தத்தம் நாடுகளின் குழந்தைகளின் விசேட தேவைகளைப் பூர்த்திசெய்ய உபயோகிக்கப்படும். மற்றப் பகுதியை வளர்முக நாடுகளின் சிறுவர் சேவை வேலைத்திட்டங்களுக்கு உபயோகிக்கவும், அவ்வவ் நாடுகளின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். ஐக்கிய நாடுகள் தாபனங்கள் மூலமாகவும், அரசுசம்பந்தமற்ற நிறுவனங்கள் மூலமாகவும், ஓர் அரசாங்கம் இன்னொரு அரசாங்கத்திற்கு வழங்கும் உதவி மூலமாகவும் அவற்றின் தேவைகளின் தகுதிக்கேற்ப பெற்றுக் கொடுக்க முடியும்.

### அடிப்படைச் சேவைகள்

அனைத்துலக குழந்தைகள் ஆண்டு சம்பந்தமான தீர்மானத் திற்கிணங்க அடிப்படைச் சேவைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. வளர்முக நாடுகளில் வாழும் சுமார் 35 கோடி குழந்தைகளின் சுகாதாரம் போஷாக்கு, கல்வி என்னும் அத்தியாவசிய சேவைகளை ஆகக்குறைந்த மட்டத்திலாவது பெற்றுக் கொடுப்பதற்கு வசதிகளை ஏற்படுத்துவது அவசியம் என்பதனாலேயே இது முக்கியத்துவம் பெறுகின்றது. தற்பொழுது இச்சேவைகள் அத்தியாவசியமாகத் தேவைப்படும் குழந்தைகளுக்கு மிக விரைவிலும், பயன்படும் தன்மையிலும், பொருளாதார ரீதியிலும் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அரசாங்கத்திடமிருந்து இச்சேவைகளைப் பெறாத வளர்முக நாடுகளில் பெரும் பகுதியில் வாழும் மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் குறைபாடுகள் யாவை என இனங்கண்டு கொள்ள ஏற்பாடு செய்தல் மூலமும், அவர்களின் தேவைகளை உணவு, போஷாக்கு, சுத்தமான குடிநீர், சுகாதாரத் தேவைகள், பெற்றோர் பொறுப்பு, பெண்களுக்கு அவசியமான மனையியற்பயிற்சி என்பன போன்ற அடிப்படைச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்க கிராமமட்டத்தில் பயிற்சியளிக்கத்தக்க தொண்டர் குழுவினரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு, அவ்வப்பிரதேசங்களின் தேவைகளை நிறைவேற்றித் தரக்கூடிய பயிற்சியை அளிக்க முடியும்.

### அனைத்துலக குழந்தைகள் ஆண்டின் சவால்

மக்களிடையிலும், அரசாங்கங்களிடையிலும் குழந்தைகளின் தேவைகள் பற்றிய ஆழமான உணர்வை ஏற்படுத்த அனைத்துலக குழந்தைகள் ஆண்டு அரிய தோர் சந்தர்ப்பத்தைபெற்றுக் கொடுக்கும் அதே வேளையில், மனிதவர்க்கத்தின் சிரேஷ்ட செல்வமாக விளங்கும் குழந்தைகளின் எதிர்காலத்துக்குப் பயன்தரும் வேலைகளைச் செய்யவும் சந்தர்ப்பம் அளிக்கின்றது. சிறுவர்களின் எதிர்காலத்தை சுபீட்சமுடையதாக்கச் செய்யப்படும் முதலீடே வெற்றிகரமான பலனைத்தரும் முதலீடாகும். அதே போன்று, வயது வந்தோர் பொறுப்புகளில் மிகச் சிறந்தது இதுவேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் இளைய தலைமுறை

**இலங்கையின் சனத்தொகை அமைப்பிலே இளைய தலைமுறைக்கே அதிக இடம் கிடைக்கின்றது. ஒவ்வொரு பத்துப்பேரிலும், நால்வரின் வயது 15 க்குக் குறைவாகும். ஐவரில் ஒருவரின் வயது 5 க்குக் குறைவானதாகும். பாடசாலைக்குச் செல்லும் வயதை எட்டாத பாலர்களும், கர்ப்பிணிகளும் இந்நாட்டில் ஆறு லட்சத்துக்கு மேலிருக்கின்றனர். சனத்தொகை பிரதானமாக கிராமியத்தன்மையை உடையதாய் காணப்படுகின்றது (78 %) அதன் வருடவிருத்தி 1.5 % சதவீதமாகும்.**

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு முன்பு பிறப்பு 1,000 க்கு 160 ஆக விருந்து, இறப்பு விகிதம், துரிதகதியில் வீழ்ச்சியடைந்த போதிலும், 1965 லிருந்து அதன் தற்போதைய நிலைமை ஒரே மட்டத்திலிருப்பதாகும். தற்போது 1,000 பிறப்புக்கு, மரண விகிதம் 45 க்கும் 55 க்கும் இடையிலுள்ளது. இவ் விகிதம் மாவட்டத்துக்கு மாவட்டம் வித்தியாசப்படுகின்றது. 1974 இல் யாழ்ப்பாணக்குடாநாட்டில் குழந்தை மரணம் 21.1 என்ற அளவில் குறைந்திருந்த போதிலும், நுவரெலியாவில் 119.0 என்ற உயர் மட்டத்தில் இருந்தது. குறை மாதப் பிரசவம் குழந்தை மரணத்திற்கு பிரதான காரணமாகும். 1 வயதுக்கும் 4 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் இறப்பிற்கு பிரதான காரணமாயிருப்பது மந்த போஷாக்காகும். மந்த போஷாக்கும், அரைப் போஷாக்கும் தற்பொழுதும் நிலவிவந்த போதிலும், விசேடமாக தோட்டப் பகுதிகளில் இது உக்கிரமாயுள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட ஆய்விலிருந்து கிராமியப் பாடசாலைச் சிறுர்களில் 35 % சதவிகிதத்தினர் மந்த போஷாக்கினால் (சோகை) பாதிக்கப்பட்டிருப்பதும், 6% க்கும் 7% க்கும் இடைப்பட்டோர் உக்கிரமான மந்தபோஷாக்கினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது. வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் குழந்தை, சேய் மரணத்திற்கும், அடிக்கடி நோய்வாய்ப்படுதலுக்கும் பிரதான ஏதுக்களாயிருப்பதுடன் இது பிரதானமாக, பாதுகாப்பான நீர் வசதியில்லாமையினாலும், சுகாதார பாதுகாப்பான மலசலக் கூடங்கள் இல்லாமையினாலும் ஏற்படுகின்றதெனத் தெரியவருகின்றது. கிராமப்புற மக்களில் 80% சதவிகிதத்தினரும், தோட்டப்பகுதிகளில் 90 சதவிகிதத்தினரும் குழாய் நீர் வசதியின்றிருக்கின்றனர். மேலும், கிராமப்புற மக்களில் 87 சதவிகிதத்தினரும், தோட்டப் பகுதிகளில் 38 சத விகிதத்தினரும் சுகாதாரப்பாதுகாப்புள்ள மலசல கூடங்கள் இன்றி இருக்கின்றனர்.

**கல்வி**

பாடசாலைக்கு வராதிருத்தல், பாடசாலைக்குப் போதலை இடையில் நிறுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஒரே வகுப்பில் கல்விசற்றல் என்பன கல்வித்துறையிலுள்ள முக்கிய பிரச்சினைகளாகும். நடத்தப்பட்ட பலதரப்பட்ட ஆய்வுகளிலிருந்து 5 லிருந்து 14 வயதெல்லையிலுள்ள சிறுர்களில் 26 % க்கும் 35 % க்கும் இடைப்பட்ட தொகையினர் பாடசாலைக்குச் செல்வதில்லையெனத் தெரிய வருகின்றது. கிராமப்புறங்களில் பெரும்பாலான சிறுமிகளும், தோட்டப் பகுதிகளில் பெரும்பாலான சிறுவர், சிறுமியரும் பாடசாலைக்குச் செல்லாதிருக்கின்றனர். இப்பிரதேசங்களில் 9 க்கும் இடைப்பட்ட வயதுச் சிறுர்களில் 50 சதவிகிதமனோர் ஒருபோதும் பாடசாலைக்குப் போகவில்லையென ஓராய்விலிருந்து தெரிய வருகின்றது. கொழும்பில் சேரிகளில் வசிக்கும் பிள்ளைகளிடையே பாடசாலைக்குப் போகாதவர்களும், படிப்பை அரைகுறையாய் நிறுத்திக் கொண்டவர்களும் பெரும்பான்மையாகவிருக்கப் பிரதான காரணம் குடும்பத்தின் வறுமையாகும். பிள்ளைகளுக்கு புத்தகங்கள் வாங்கவும் சீருடைவாங்கவும் பணவசதியில்லாதிருப்பது தெரிய வருகின்றது. பெற்றூர் வேலைக்குப் போகும் பொழுது வீட்டில் குழந்தைகளைக் கவனிக்க பெரிய பிள்ளைகள் வீட்டில் நிறுத்தப்படுகின்றனர்.

**குழந்தைகளைப் பராமரித்தல்**

வேலை செய்பவர்களிடையில், நகரங்களிலும், தோட்டங்களிலும் வேலைசெய்யும் பெண்களும் பெருந்தொகையாக உள்ளனர். அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின்படி தோட்டங்களில் 20 க்கும் 24 க்கும் இடைப்பட்ட வயதுப் பெண்கள் 95 சதவிகிதத்தினருக்கு மேற்பட்டோரும், நகரங்களில் இவ்வயதுப் பிரிவினரில் 65 சதவிகிதத்துக்கு மேற்பட்டோரும் வேலை செய்பவர்கள் எனத் தெரியவருகின்றது. இப்புள்ளி விபரம் குழந்தைகளைப் பராமரிக்கும் வசதிகளை அதிகப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன. அண்மைக் காலத்தில் கைவிடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. எனினும் இது சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய ரீதியிலான புள்ளி விபரங்கள் போதியனவாக இல்லை. அரசாங்க குழந்தைகள் இல்லங்களின் இட வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், அதிகரித்துவரும் இப் பிரச்சினைகளை எதிர் நோக்கக் கூடிய அளவு இவ்வசதிகள் விஸ்தரிக்கப்படவில்லை.

உடல், உளப்பாதிப்புள்ள குழந்தைகள் பற்றிய பிறழ்யற்றதும், அடைருடத்தகவல்களும் அடங்கிய புள்ளி விபரங்கள் சரியாக இல்லை. கிட்ட விடரங்களின்படி வலுவிழந்த பிள்ளைகளின் ஒரு சில பகுதியினரே தொண்டு அடிப்படையில் உதவும் தாபனங்களின் மூலமாகப் பராமரிக்கப்படுவதாகத் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சமுதாயத்திற்கு நீங்கள் எவ்வாறு உதவலாம்?

வறிய நாடுகளில் மாத்திரமன்றி செல்வம் படைத்த நாடுகளிலும் பெருந்தொகையான குழந்தைகள் தமது உரிமைகளான நல்ல வைத்திய வசதி, கல்வி, போஷாக்குள்ள உணவு என்பனவற்றை இழந்திருக்கின்றனர். இக் குழந்தைகளுக்காக ஏதாவது செய்ய நீங்களும் கருத வேண்டும்.

*அனைத்துலக குழந்தைகள் ஆண்டிலே, குழந்தைகளின் சிறப்பான தேவைகள் மீது கவனத்தை ஈர்க்கவும், அதன் மூலம் இன்று போன்றே எதிர்காலத்திலும் குழந்தைகளின் சுபீட்ச வாழ்விற்காகவும், அவர்களின் உயரிய எதிர்கால இலட்சியத்தை ஈடேற்றிக் கொள்ளவும், அவர்களின் ஆற்றலை அபிவிருத்தி செய்யவும் வசதி செய்யும் விதத்தில் பிராந்திய ரீதியில் தாபிக்கப்பட்டிருக்கும் சர்வதேச குழந்தைகள் ஆண்டு நிகழ்ச்சிகளுக்கு நீங்களும் ஒத்துழைப்பு அளியுங்கள்.*

1979 அனைத்துலக குழந்தைகள் ஆண்டாகும். எனவே இவ்வருடத்தில் குழந்தைகளுக்குரிய இடத்திற்கு அவர்களை இட்டுச் செல்ல விசேட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனவே எமது எல்லா நடவடிக்கைகளிலும் அவர்களின் இலட்சியத்திற்கே முன்னிடம் அளித்தல் வேண்டும். அவர்களுக்காக செய்யப்படும் எல்லா வேலைகளிலும் நீங்களும் பங்குகொண்டு உங்கள் உதவியையும், உங்களின்பரிவையும் எதிர்பார்க்கின்ற பிள்ளைகளின் சார்பாக சேமநல வேலைகளில் ஈடுபட சர்வதேச குழந்தைகள் ஆண்டை உங்களின் ஆண்டாகவும் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

*இவ்வாண்டின் ஒவ்வொரு நாளிலும் நாமெல்லோரும் பிள்ளைகளின் மீது கருத்தைச் செலுத்துவோமாக. அவர்களின் வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்க வசதி செய்யவும், அவர்கள் நாட்டின் நற்பிரஜைகளாக வளர்ச்சியுற எமது குடும்பங்களிலும், எமது கிராமங்களிலும், நகரங்களிலும், எம் நாட்டிலும் குழந்தைகளுக்கு எவ்விதம் உதவி செய்ய வேண்டும் என ஆராய்ந்து அதன்படி செயற்படுங்கள்.*

உலகின் சகல நாடுகளிலும் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள், தம்மை அடுத்துள்ள நாட்டு குழந்தைகளின் நிலைமையையும் அவர்கள் வாழும் விதத்தையும் பற்றி கற்றுக் கொள்வதன் மூலம் சர்வதேச குழந்தைகள் தினம் நினைவுறுத்தப்படுகின்றது. எனினும் இத்தகைய வேலைத் திட்டங்களிலே ஏறக்குறைய 12 கோடி குழந்தைகள் பங்குபற்ற முடியாது. ஏனெனில் அவர்கள் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களாக இல்லாதிருப்பதாகும். இக் குழந்தைகள் வளர்முக நாடுகளில் அபிவிருத்தியடையாத பிரதேசங்களில் வாழுகின்றனர்கள். அவர்களுக்குப் பாடசாலைகளில்லை; ஆசிரியர்களுமில்லை. 1979 ஆம் ஆண்டை அனைத்துலக குழந்தைகள் ஆண்டாக பிரகடனஞ் செய்ததற்கு இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காரணமாகும். எனவே உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி பெற வசதி செய்து கொடுக்கும் விதத்தில் நாம் செயற்படவேண்டும்.

அனைத்துலக குழந்தைகள் தினம் உலகில் வாழ் குழந்தைகளுக்கு மரியாதை செலுத்தும் தினமாகும். உலகிலுள்ள 5 சிறுவர்களில் நால்வர் போதிய வைத்திய வசதியின்றி, பாடசாலைகளில்லாத பிரதேசங்களில் வாழுகின்றனர்கள் என்பதை உணரும் பொழுதுதான் இத்தினத்தினதும், இவ்வாண்டினதும் முக்கியத்துவம் எம்மால் உணரப்படுகின்றது. இவ்வாண்டிலே சுகாதார,கல்வி வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எம்மால் ஏதேனும் உதவி செய்யப்படல் வேண்டும்.

வளர்முக நாடுகளிலுள்ள குழந்தைகளில் மூன்றிலொரு பகுதியினருக்கு மேற்பட்டோர் அவர்களின் ஐந்தாம் பிறந்த தினத்தை காணுது மடிந்து விடுகின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்களா? மந்த போஷாக்கின் காரணமாகவும், சுகாதார வசதியின்றியும், சுத்தமான குடிநீரின்றியும் சாதாரண சிறுபிள்ளை நோய்க்காளாகி மடியும் குழந்தைகளின் எண்ணிக்கையே அனந்தம். இந்த அனைத்துலக குழந்தைகள் ஆண்டில் எமது உதவி கிடைக்காவிடில், வாழாது மடியவிருக்கும் குழந்தைகளின் சார்பாக ஏதாவது செய்ய நாம் ஒன்றிணைவோம். சிறுபிள்ளை நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் உலகில் எல்லாவிடத்திலும் நாம் நினைப்பது போல் எடுக்கப்படுவதில்லை. வளர்முக நாடுகளில் ஒவ்வோராண்டிலும் பிறக்கும் 8 கோடி குழந்தைகளில் குறைந்தது 50 லட்சம் பேராவது தடுக்கப்படக்கூடிய சிறுபிள்ளை நோயினுல் பீடிக்கப்பட்டு மடிகின்றனர். இதில் இரண்டு மடங்கிற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் இந்நோய்களினுல் வலுவிழக்கின்றனர். அனைத்து குழந்தைகள் ஆண்டில் இக்குழந்தைகளின் சார்பாக ஏதாவது எம்மால் செய்யமுடியும். அதுகுறித்து செய்யக்கூடியதென்ன என்பதனை நீங்களும் ஆராய்ந்து பாருங்கள்.

சர்வதேச குழந்தைகள் தினம் மகிழ்ச்சிகரமானதொன்ருவது, உலகெங்கனும் வாழும் குழந்தைகள், வேறு நாட்டுக் குழந்தைகளுடன் நட்புரிமை கொண்டாடும் பொழுதுதான். உலகில் வாழும் எல்லாக் குழந்தைகளும் மகிழ்ச்சியுடன் வாழச் சந்தர்ப்பமில்லாதிருக்கின்றனர் என்பதை நாம் இங்கு நினைவுறுத்திக் கொள்ள வேண்டும். மகிழ்ச்சிகரமாக வாழ சுகதேகிகளாய் பிள்ளைகள் இல்லை. உலகிலுள்ள குழந்தைகளில் குறைந்தது 90 சதவிகிதமானேர் அடிப்படை வசதிகள் தானும் இல்லாத வளர்முக நாடுகளில் வறிய நகர, கிராமப் புறங்களில் வாழுகின்றனர். இக்குழந்தைகளுக்கும், இக்குழந்தைகளின் குடும்பங்களுக்கும் வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வளர்முக நாட்டு அரசுகள் இப்பிரதேசங்களில் சுகாதாரத் திட்டங்களை செயற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த அனைத்துலக குழந்தைகள் ஆண்டில், இவ்வேலைகளில் ஈடுபடுவோர்களுக்கு உங்களால் செய்யக்கூடிய உதவியைச் சிந்தியுங்கள்.

உலகில் சில பிரதேசங்களில் பெண்களும், சிறுவர்களும் ஒரு நாளின் பெரும்பகுதியை குடி நீர் பெறுதற்காகவே செலவளிக்கின்றனர். அவர்கள் தமக்குத் தேவையான நீரைப்பெற பல மைல்தூரம் நடந்து செல்லுகின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவர்கள் பாதுகாப்பற்ற நீர் நிலைகளில் சென்று நீர் கொண்டு வருகின்றனர். சுத்தமில்லாத தண்ணீரைக் கொண்டுவந்து அதனைக் குழந்தைகள் பருகுவதால் அவை நோய்வாய்ப்படுகின்றன. ஏராளமான குழந்தைகள் இந் நோய்களினுல் இறக்கின்றன. இந்த சர்வதேச சிறுவர் ஆண்டிலே சகலரும் அதாவது அரசுகளும், பொதுத்தாபனங்களும், தனிப்பட்டவர்களும் குழந்தைகளின் நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி ஆராயவும், அவர்களுக்கு சுத்தமான நீர், அடிப்படைச் சுகாதார வசதிகள், நல்ல உணவு, பாடசாலை வசதி என்பனவற்றைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவும் அதன் மூலம் நீடித்த வாழ்வைப் பெற்றுக் கொடுக்கவும் செயற்பட வேண்டும்.

*ஒவ்வோராண்டிலும் பிறக்கின்ற குழந்தைகளில் 1 கோடி 50 லட்சம் பேர் ஐந்தாண்டுகள் தானும் உயிரோடிருப்பதில்லை. வளர்முக நாடுகளில் 90 சதவீதமான சேய்களும், குழந்தைகளும் வீணாக இறக்கின்றன. நல்ல உணவு, சுத்தமான நீர், அடிப்படைச் சுகாதார வசதிகள், மலசலகூட வசதிகள், குழந்தைகளுக்கான தேவைகள் என்பன பற்றி பெற்றோர்களுக்கு நல்ல விளக்கம் அளிப்பதன் மூலம் மடியும் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற பரந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்தமுடியும்.*

வளர்முக நாடுகளிலே தோன்றும் நோய்களில் 80 சதவீதமானவற்றை நன்னீர் வழங்குவதன் மூலம் தவிர்க்கலாம் என வைத்தியர்கள் கருதுகின்றனர். இந்நாடுகளில் மக்களுக்கு கிணறுகளை தோண்டவும், மலைப் பிரதேசங்களில் சுத்தமான நீரை குழாய்மூலம் பெற்றுக் கொள்ளவும் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளவும் ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதன்மூலம் இந் நோய்களைப் பெருமளவு தடுக்கலாம். அசுத்த நீர் குழந்தைகளையே பெரும்பாலும் பாதிக்கின்றது. இதனால் குழந்தைகள் ஒருவயதை எய்து முன் இறக்கின்றன. 1979 ஆம் ஆண்டை அனைத்துலக குழந்தைகள் ஆண்டாக பிரகடனஞ் செய்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். இதனால் யுனிசெப் போன்ற நிறுவனங்களுக்கு உதவுவதன்மூலம் வளர்முக நாட்டுக் குழந்தைகளுக்கு சுத்த நீரைப் பெற்றுக் கொடுக்கமுடியும். எனவே உதவளிக்க எம்மை அர்ப்பணிப்போம்.

*வளர்முக நாடுகளில் மக்களின் ஆயுள் காலம் 40 ஆண்டுக்குக் குறைவாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில் மக்களின் வயதெல்லை 75 க்கு மேலாகும். இங்கு 35 வருட வித்தியாசமிருப்பதை நீங்கள் உணரமுடியும். எனினும் புள்ளி விபரங்கள் பிழையற்றதெனக் கூற முடியாது. வளர்முக நாடுகளில் 5 வயதைத் தாண்டிவாழும் குழந்தைகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளிலுள்ள வயதெல்லையான 75 ஆம் பார்க்க கூடிய காலம் வாழமுடியும். என்றாலும் இங்கு பிரச்சினையாக விருப்பது வளர்முக நாடுகளின் குழந்தைகளிற் பெரும்பாலானோர் பிறந்த முதலிரண்டு வருடங்களில் இறப்பதாகும். மந்த போஷாக்கு, சுகாதாரப் பாதுகாப்பில்லாத குடிநீர், அடிப்படைச் சுகாதார வசதிகளின்மை, சிறு பிள்ளை நோய்த்தடுப்பு முறைகளின்மை என்பவற்றின் காரணமாக உலகில் வறிய நாடுகளில் பிறக்கும் குழந்தைகளில் பாதிக்கு மேல் இவ்விதம் இறக்கின்றன. பிறக்கும் பொழுது இவர்கள் வாழக்கூடிய காலம் இரண்டு வருடங்களுக்குக் குறைவாகும். ஐ. நா. தாபனம் 1972 ஆம் ஆண்டை அனைத்துலக குழந்தைகள் ஆண்டாகப் பிரகடனஞ் செய்தமைக்கு இதுவுமொரு ஏதுவாகும். நாமும் இதனை உணர்ந்து இந் நிலைமையை மாற்றி அமைக்க ஏதாவதொன்றைச் செய்வோம். அவ்வேலையை இவ் வருடத்துக்கு மாத்திரம் கட்டுப்படுத்தாமல் எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செய்வோமாக.*

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சகல குழந்தைகளுக்கும் பாடசாலைக்கு செல்லும் வாய்ப்பில்லை. பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கூட ஓரிரண்டு வருடங்களில் பாடசாலையைத் துறக்கின்றனர். அவர்களின் தரித்திர வாழ்க்கை நிலைமை அவர்கள் தொடர்ந்து பள்ளிக்குச் செல்ல இடமளிப்பதில்லை. பலநாடுகள் விசேட வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துகிற போதிலும் இந்நிலைமை காரணமாக படிப்பறிவின்மை நிலவி வருகின்றது. மந்த

(11ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் எமது நிறுவனத்தின் அதிதிகள்

சர்வதேச சிறுவர் ஆண்டினை முன்னிட்டு கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் ஒன்பதாம் வகுப்பில் பயிலும் பிள்ளைகளிடையே ஒரு கட்டுரைப் போட்டியை நடத்திபது. இப்போட்டியில் விசேட திறமை காட்டிய மாணவ, மாணவியர் முப்பது பேர் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பாடசாலைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் பின்னர் நிறுவகத்தினல் கொழும்புக்கு அழைக்கப்பட்டு, உபசரிக்கப்பட்டு பரிசளிக்கப்பட்டு, உற்சாகப்படுத்தப்பட்டனர். அத்துடன் கமத்துறை சார்ந்த பல விடயங்களில் அவர்களுக்கு மூன்று நாள் பயிற்சியும் அளிக்கப்பட்டது. கமத்துறை வளர்ச்சிக்கு நாடு எத்துணை முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை இச்சிறார்களுக்கு எடுத்துக் கூறுவதும், அச்சிறுவர்கள் ஊடாக ஏனைய சிறார்களுக்கும் எட்டச் செய்வதும் பிரதான நோக்கமாகும்.


நிறுவகத்தின் அதிதிகளாக வந்திருந்த இப்பிள்ளைகள் துறைமுகம், மிருகக் காட்சிச்சாலை, தொல்பொருட் காட்சிச்சாலை, சிறுவர்பூங்கா, கமத்தொ



பிரதி கல்வி அமைச்சர் திரு. லயனல் ஜயதிலக்க வெற்றிபெற்ற மாணவிக்குப் பரிசு வழங்குகிருர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆராய்ச்சி பயிற்சி உத்தியோகத்தர் ஒருவர் கமத்துறையைப்பற்றி மாணவர்களுக்கு விளக்குகிறார்

ழிற் திணைக்களத்தின் வீட்டுத்தோட்டப் பிரிவு ஆகியவற்றுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

நிறுவகம் இம்மாணவர்களுக்குப் பயிற்சி அளித்த பின்னர் அவர்களுக்கு ஒரு பரீட்சையும் நடத்தியது. இதில் முன்னிடம் பெற்ற மூன்று மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டதுடன், ஏனையோருக்கும் ஆறுதற் பரிசுகள் வழங்கப்பட்டன.

(9 பக்கத் தொடர்ச்சி)
*சிறுவர் சமுதாயத்திற்கு ......................*

போஷாக்கின்மை,மோசமான சுகாதாரவசதி, போதியளவு உணவு கிடைக்காமை காரணமாக பாடசாலையில் கல்வி கற்பதற்கு கவனஞ்செலுத்த முடியாமற் போவதுடன், குடும்பத்தை நடத்துவதற்காக 7—8 வயதிலேயே பாடசாலைக்குப் போவதை நிறுத்திக்கொள்ளல் போன்ற பல காரணங்கள் இந்நிலைமையை உருவாக்குகின்றன. ஐ. நா. 1979 ஆம் ஆண்டை அனைத்துலக குழந்தைகள் ஆண்டாக பிரகடனஞ் செய்துள்ள போதிலும், அரசுகளும் தாபனங்களும் நாமெல்லோரும் இதனை புதிய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டியதுடன், இந்நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த செய்ய வேண்டியவைகளையெல்லாம் மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் ஆண்டின் நோக்கம்

அசோகா சேபால
ஆராய்ச்சி பயிற்சி உத்தியோகத்தர்

இது சர்வதேச சிறுவர் பரம்பரைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆண்டு. குழந்தைகளின் சார்பாக ஆற்றப்பட வேண்டிய கடமைகளையும், அவர்களின் உரிமைகளையும் குறித்து வயதுவந்த பரம்பரையின் கவனத்தை ஈர்க்க வேண்டிய ஆண்டு. சிறுவர்களின் சிந்தனையைத் தூண்டிவிட, அவர்களின் வாழ்க்கையை சுபீட்சமுடையதாக்க முழு மனித சமுதாயமும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் ஆண்டு. உலகெங்கும் வாழும் சிறுவர் சமுதாயத்தின் சார்பாக இன, மத, சாதி வேறுபாடின்றி ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி எமது கடமையை நிறைவேற்ற வேண்டிய வருடமாகும் இது.

மனிதன் உலகத்தை வென்றுள்ளான். சமுத்திரத்தனடியில் சுழியோடி அதன் அற்புதங்களை கண்டு பிடித்துள்ளான். சந்திரனில் தன் அடியை வைத்து விண்வெளியை ஆட்கொண்டான். எனினும் எண்பது கோடிக்கு மேற்பட்ட தமது சகோதர மக்கள் தரித்திரத்தில் சிக்கி துக்கமென்னும் நரகத்தில் சிறைப்பட்டிருக்கின்றனர் என்பதை மறந்து விட்டான். இந்த எண்பது கோடி மக்களில் நாலில் மூன்று பங்கினர் ஆசியா, ஆபிரிக்க கண்டங்களில் வசிப்பவராவர். அவர்களில் சரிபாதிக்கு மேற்பட்டோர் இளம் பருவத்தினராவர். 1979 ஆம் ஆண்டு சர்வதேச சிறுவர் ஆண்டாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சர்வதேச சிறுவர் நிதியத்தினால் பிரகடனப் படுத்தப்பட்டமை, பசியினால் மடியும், போஷாக்கின்றி வருந்தும், படிப்பறிவின்மையால் துன்பப்பிடியில் சிக்கி உழலும்,நோய் நொடிகளினால் வலு விழந்து நிற்கும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளின் பால் மானிட சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்கும் சீரிய நோக்கத்துடனாகும். அப்படியெனில் இவ்வருடத்தில் எம்மால் செய்யப் படவேண்டிய சேவைகள் யாவை? ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டு மகளிருக்காக பிரகடனப் படுத்தப்பட்டது. அப்பொழுது மகளிர்சார்பாக கீதங்கள் பாடப்பட்டன; பாராட்டுகள் செலுத்தப்பட்டன; கண்காட்சிகள் நடத்தப்பட்டன. கருத்தரங்குகளும், மாநாடுகளும் கூட்டப்பட்டன. பல்லாயிரக்கணக்கில் விழாக்களும், போட்டிகளும் நடத்தப்பட்டன. எனினும் வேதனையால் கண்ணீர் சிந்திய-தரித்திரத்தால் உழன்ற பல்லாயிரக்கணக்கான பெண்களில் எத்தனை பேருக்கு நன்மை ஏற்பட்டது? அந்த மகளிர் ஆண்டின் பிரதிபலன் சில நினைவுக்குறிப்புகள் மாத்திரமே. இத்தகைய அனுபவத்துடன் நாம் சர்வதேச சிறுவர் ஆண்டை எவ்விதம் கையாள வேண்டும்? இதனையும் ஞாபகக் குறிப்புகளுக்காக விட்டுவிட வேண்டுமா? இல்லை. சர்வதேச சிறுவர் ஆண்டில் குறைந்தளவிலாவது கண்ணீர் சிந்தும் சிறுவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு சந்தோஷம் காணும் கபாடத்தைத் திறந்துவிட உதவுவதே எமது நோக்கமாக இருத்தல் வேண்டும்.

துன்பப்படும் குழந்தைகளை நம் கண் முன்னால் காணக் கூடியதாயிருக்கிறது. சலுகைகள் பெற்ற ஒரு சிறு கூட்டத்தினர் தவிர்ந்த இலங்கை மக்களில் 84 சதவிகிதமானோர் ரூ. 800- க்குக் குறைந்த வருமானம் பெறுவோராவர். முழுச்சனத் தொகையில் 50 சதவிகிதத்துக்கு மேற்பட்டோர் ரூ. 300 க்குக் குறைந்த வருமானம் பெறுகின்றனர். அவர்களினும் அரைவாசிப் பேர் ரூ. 100 க்குக் குறைந்த வருமானம் பெறுகின்றனர். இப்புள்ளி விபரத்தின்படி நோக்கினால், ஈழம் வாழ் மக்களில் 15 சதவிகிதமானோருக்குக் குறைந்தவர்கள் மாத்திரமே தம்குழந்தைகளுக்கு அவசியமான வசதிகளைச் செய்து கொடுக்கக் கூடியவராயிருக்கின்றனர் எனக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது தம் குழந்தைகளைப் பராமரிக்கும் பெற்றோரை நம்சிந்தனையிலிருந்து அகற்றி விடுவோம். எமது சிந்தனையை வயிற்றுக்கு உணவு தேடி வருந்தும், வேலை செய்துவயிறு கழுவும் பிச்சையெடுத்துப் பிழைக்கும், பலவிதமான குற்றங்களைச் செய்யும் சிறுவர் பரம்பரையின் மீது செலுத்துவோம். சூரியனும், சந்திரனும் ஒளிபாய்ச்சிய போதிலும், அவர்கள் அவ்வொளியினைக்காணாது துன்பவாழ்க்கை வாழுகின்றனர்.

அரசாங்கமும் பலதரப்பட்ட நிவாரண உதவிகளைச் செய்து கொண்டு தானிருக்கிறது. இலவசக்கல்வி, வைத்திய உதவி, சுகாதார வசதி, உணவுக் கூப்பன் என்பன போன்ற பல உதவிகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன. இருப்பினும் உண்மையில் இவ்வுதவிகள் அவர்களுக்குக் கிடைக்கின்றனவா? குழந்தைகளின் நோய்க்கு வைத்திய உதவி இலவசமாகக் கிடைக்கின்ற போதிலும், மருத்துவ மனைக்குப் போகவும், குழந்தைக்குத் தேவையான உணவைப் பெறவும் பணம் தேவைப்படுகின்றது. இவ்விதமான சந்தர்ப்பங்களில் ஏழைத்தாய்தந்தையர் தம் உணவுக்கூப்பன்களை விற்கின்றனர். நோய்வாய்ப்பட்ட குழந்தையின் சுகதுக்கங்களைக் கவனிக்க தாய்க்கு நேரமில்லை. அவள் ஏதேனும் தொழில் செய்தாக வேண்டும். கட்டாயத்தின் பேரில் இப்பொறுப்பை குடும்பத்தின் மூத்தபிள்ளை ஏற்க நேரிடுகின்றது. இந்த நிலையில் அந்தப் பிள்ளையின் பாடசாலை வாழ்க்கை முற்றுப் பெறுகின்றது. புத்தகங்களின்றி பள்ளி சென்று ஆசிரியரின் துன்புறுத்தலுக்கு அகப்படாது வீட்டிலிருக்கவே பிள்ளை விரும்புகின்றான். சிறிதுகாலஞ் செல்ல அந்தப்பிள்ளையும் வேலைக்காரப்படையில் சேர்ந்துவிடுகின்றான். கடலை விற்றும், 'சுவீப்' டிக்கட் விற்றும், பாட்டுப் பாடிப் பிச்சையெடுத்தும் வாழுகின்ற ஏழைச்சிறுவர்களிடம் இந்த தரித்திர வாழ்க்கையை நாம் கண்கூடாகக் காணுகின்றோமல்லவா?

தேவலோகத்திலிருந்து வந்த தேவகுமாரர்களைப் போன்று அழகிய ஆடை அணிகளை அணிந்து குழந்தைகளை பாடசாலைகளுக்கு இட்டுச் செல்லும் கந்தைத் துணியணிந்த வேலைக்காரச் சிறுவர்களை நாம் அடிக்கடி காணுகின்றோமல்லவா! எமது குழந்தைக்குரிய கல்வி, ருசியான உணவு ஆடை அணிகலன், வேலைக்காரச் சிறுவனுக்கு இல்லாமற் போவதேன்? இது நம் மனச்சாட்சிக்கேற்றநிலையா?

எனினும் இதுதான் இன்றைய நிலை. தனது குழந்தையை வேலைக்கு அனுப்புகிற தாய் 'நன்றாக உண்டு, உடுத்து இருந்தால் போதும்' என்று நினைத்தே அதைச் செய்கிறாள். ஆனால் அவள் எதிர்ப்பார்ப்பது நடக்கிறதா?

இக்குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு அவர்களின் பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் கல்வித்திணைக்களத்திடமும், அரசாங்கத்திடமும் மாத்திரமே விடப்பட்டிருக்கவில்லை. இக்குழந்தைகளும் நாட்டின் குழந்தைகளாவர். உங்களதும் எங்களதும் குழந்தைகளாவர். எமது எதிர்காலம் அவர்களில்தான் தங்கியுள்ளது என்றால், எமது சிந்தனைக் கதவுகளும் திறந்து விடப்படவேண்டும். வெளிச்சம் அவர்கள் மீது விழவேண்டும். பொதுவில் எல்லோரைப் பற்றியும் அல்லது பெரும்பாலாரைப் பற்றியும் புதியவிதமாக நாம் சிந்தித்தல் வேண்டும். வழியில் கடலை, சுவீப் விற்கும் குழந்தையும், பிச்சையெடுக்கும் குழந்தையும் உமது வீட்டின் வேலைக்காரச் சிறுவனும் உமது அன்புக் குழந்தையும் இந்நாட்டின் அருமைக் குழந்தைகள் என்ற எண்ணம் நம்மிடையில் வளர வேண்டும்.

சகல சம்பத்துடன் வாழும் குழந்தைகளைப் பற்றி ஒரு கணம் மறந்து துர்ப்பாக்கிய நிலையில் வாழும் குழந்தைகளைப்பற்றிச் சிந்திப்போம். அனைத்துலக குழந்தைகள் ஆண்டில் நாம் இவர்களைப் பொறுத்தமட்டில் என்ன செய்ய முடியும்? உண்மையில் குழந்தைப் பரம்பரைப் பிரச்சினையென்பது தனிப்பட்ட ஏக பிரச்சினை அன்று. அது சமூக, பொருளாதார அமைப்பில் சிக்குப்பட்ட சிக்கலான பிரச்சினையாகும். எனினும் குழந்தைப் பரம்பரையின் அபிவிருத்திக்காக இப்பிரச்சினைகள் தீர்க்கப் படும் வரை பார்த்துக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. எனவே இப்பிரச்சினைகள் மத்தியில் சிறுவர் பரம்பரைப் பிரச்சினைக்கு தீர்வு காணுவதெப்படி?

நீங்கள் பணவுதவி செய்வதன் மூலம் இதனைத் தீர்த்துவிட முடியாது. அனைத்துலக தொழிலாளர் தாபனத்தின் ஆய்வின்படி சிறுவர் சனத்தொகையில் 5 கோடி 20 லட்சம் குழந்தைகள் உழைப்பாளர் படையில் சேர்ந்துள்ளனர். கடினமான சரீர உழைப்பின் மூலம் குடும்பங்களை நடத்தக் கைகொடுக்கும் இக்குழந்தைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைக்கு ஈடுபடுத்தும் தடைச்சட்டம் மூலம் மாத்திரம் இவர்களுக்கு உதவமுடியுமா?

இங்கு அரசாங்கம் முன்னிடம் வகிக்க வேண்டும். முதலில் சிசுக்களுக்காக குழந்தை பராமரிப்பு நிலையங்களை கிராமங்கள் தோறும் நிறுவுதல் வேண்டும். இந் நிலையங்களில் ஒரு வேளை நிறை உணவு வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளுக்கு கிடைக்கும் அன்பையும், கருணையையும், நல்லொழுக்கத்தையும் இங்கு பெற்றுக் கொடுக்கமுடியும். பாடசாலைகளுக்குச் செல்லும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு வேளை நிறை உணவு அளித்தல், ஏழைக் குழந்தைகளுக்கு புத்தகங்களை வழங்குதல், புலமைப்பரிசில் வழங்குதல் என்பவை மூலமாக குழந்தைகளை கல்வித்துறையில் கவனஞ் செலுத்த தூண்டிவிடமுடியும். இதன் மூலம் நல்லொழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்க முடியுமென்பது மாத்திரமல்ல, சிறுவர் பரம்பரையிலிருந்து தெளிவான எதிர்காலம் உருவாகும் என்ற நம்பிக்கையையும் வைக்க முடியும்.

எனினும் ஓர் அரசாங்கம் எவ்விதம் இச் சேவைக்காகும் செலவைப் பொறுக்க முடியும்? இங்கு தேசிய பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் முக்கிய பங்கை வகிக்கமுடியும். குழந்தைகள் மீது அன்பையும், கருணையையும் ஏற்படுத்தும் புகைப் படங்களையும், கட்டுரைகளையும் வெளியிட வேண்டும். குறைகாணுமிடத்து அதனைக் கண்டித்தல் வேணடும். பணக்காரர்களின் இரக்கத்தைத் தூண்டும் விதத்தில் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் இயங்கவேண்டும். இவ்விதமான சந்தர்ப்பங்களில் மத்திய வகுப்பினர் இவ்வுதவிகளை தமக்குப் பெருது தியாகஞ் செய்வர். இதற்கு மேலதிகமாக செல்வம் படைத்த நிறுவனங்களும், தொண்டர் நிலையங்களும் பண வுதவி ı ıı ɔ ன்வரும்.

கிராம மட்டத்திலுள்ள சங்கங்கள் கிராமாபிவிருத்திச் சங்கங்கள், சன சமூகநிலையங்கள், மகளிர் சங்கங்கள் என்பன வற்றை நன்கு இயக்குவித்து அவற்றின் மூலம் பெருமளவு சேவையைச் செய்ய முடியும். பல் வைத்தியச் சேவை, நோய்த் தடுப்பு மருந்தேற்றல் என்பவற்றின் முக்கியத்துவத்தை விளக்கி அவற்றின் பயனைப் பெற மக்களைத் தூண்டமுடியும். விடுமுறை முகாம்கள், விடுமுறை நிகேதனங்கள் ஆகியவற்றை நடத்தவும், சிறுவர்களையும், இளைஞர்களையும் ஒன்றிணைக்கும் இயக்கங்களை ஏற்படுத்தவும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அத்தகைய வசதிகள் கிடைத்தால் கல்வியைப் புறக்கணிக்கும் குழந்தைகளோ, பெற்றோர்களோ இருக்கமாட்டார்கள். 'கல்வி மனிதனை முழுமையானவனுக்குகிறது' என்றோற் போன்று கல்வி கற்றால் மற்றெத்தனையோ பிரச்சினைகள் தீர்க்கப் படும்.

எனினும் இவற்றையெல்லாம் ஒரு வருடத்தில் செய்து விடமுடியாது. நாம் நமது குழந்தைப் பரம்பரை பற்றிய பொறுப்பை மனதிற் கொண்டு செயற்படும் ஒரு வருடத்திற்குப் பிறகு நிச்சயமாக எமது சிந்தனை அவர்களுக்குச் சேவை புரியத் தூண்டும். எம்மை அத்துறையில் அர்ப் பணிப்போம். சூரியனைக் கண்ட மலர் முகம் காட்டுவது போன்று 1979 ஆம் சர்வதேச குழந்தைகள் ஆண்டில் குழந்தைகள் புன்முறுவல் செய்தால் எமது முயற்சியில் நாம் வெற்றிபெற்றவர்களாவோம். சிறுவர் பரம்பரை முழுவதற்கும் சேவை செய்ய முடியாது போனாலும் வேதனையினால் அழும் குழந்தைகளின் வேதனையின் தன்மையை அறிந்து அதில் ஒரு சிறிதளவையாவது அகற்றிவேதனையைக் குறைக்க முடியுமானால் அனைத்துலக குழந்தைகள் ஆண்டின் நோக்கை நிறைவேற்றியவர்களாவோம். சுபீட்சமான எதிர் காலத்தை நோக்கி பீடுநடைபோடும் நாட்டின் குழந்தைகள் உங்களுக்கும், எனக்கும் ஆறுதலையே தருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளைப் பராமரிக்கும் நல்லமுறைகள்

❀ செல்வி மல்காந்தி விஜயதுங்க
(ஆராய்ச்சி ப்யிற்சி உத்தியோகத்தர்)

**ஒவ்வொரு கர்ப்பிணிப் பெண்ணும் தனக்கு நல்ல ஆரோக்கியமான குழந்தை பிறக்க வேண்டுமென்றே விரும்புகிறாள். அவள் கர்ப்பிணியாயிருக்கும் பொழுது மேலதிகமான உணவு உட்கொள்ள வேண்டும். அவளுக்கும், அவளுடம்பில் வளரும் சேய்க்குமே அந்த உணவு அவசியம். தாய் அளவான உணவை உட்கொள்ளுவாளானால் அவளது சேயும் ஆரோக்கியமாக வளரும்.**

கர்ப்பிணித் தாய்க்கு விசேட உணவு தேவை இல்லை. சாதாரணமாக புசிக்கும் உணவே போதும். எனினும் சாதாரணமாக எடுக்கும் அளவிலும் பார்க்க கூட உட்கொள்ள வேண்டும். அவள் சோறு, பாண் போன்ற சக்திதரும் உணவைப் போன்றே மீன், இறைச்சி போன்றவற்றை வளர்ச்சிக்கு உதவியளிக்கும் புரதச்சத்து பெறுவதற்காக அளவாக எடுத்தல் வேண்டும். மேலும் குறிப்பிட்ட அளவு உயிர்ச்சத்தையும், கனிப் பொருளைத் தரும் பச்சை நிற காய்கறி வகைகளையும் தினந்தோறும் சாப்பிடவேண்டும்.

அவள் போதியளவு பானங்களையும், பாலையும் பருக வேண்டும். போதியளவு ஓய்வெடுக்கவும் அவள் மறந்துவிடக்கூடாது

கர்ப்பிணித் தாய்மார் வைத்திய நிலையங்களில் தம்மைப் பரீட்சித்திக்கொள்ள வேண்டும். அவளின் இரத்தத்தில் அளவான இரும்புச்சத்து இல்லாவிட்டால் இரும்புச்சத்து வில்லைகளை தினந்தோறும் எடுக்க வேண்டும்.

சில வேளைகளில் பிறந்த பச்சிளங் குழந்தைகள் ஏற்பு நோயினால் இறப்பதுண்டு. அதற்குக் காரணம் அத்தகைய நோய்களை எதிர்க்கும் சக்தியைப் பெறாமையாகும். கர்ப்பிணித்தாய் வைத்திய நிலையத்தில் தனக்கு ஏற்பு நோய்த் தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்வதன் மூலம் தனக்கும், தன் சேய்க்கும் பாதுகாப்பளிக்க முடியும். கர்ப்பிணிப் பெண் பிரசவத்துக்கு முன் மகப் பேற்று இல்லத்தில் தங்குவது வீட்டில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதிலும் பார்க்க நல்லது. மகப்பேற்று இல்லத்தில் கர்ப்பிணியின் நிலையை வைத்தியர்கள் கவனிக்கக்கூடிய தாயிருப்பதோடு, திடீரென ஏதும் பிரச்சினை தோன்றினாலும் அவற்றைக் கவனிக்க டாக்டர்களிருப்பர். குழந்தை பிறந்த முதல் நாளிலிருந்தே தாய் பிள்ளைக்கு தாய்ப் பாலூட்ட வேண்டும். முதலாவதாக சில நாட்களுக்கு சுரக்கும் பால் போஷாக்குள்ளதாயும், சில நோய்களிலிருந்து குழந்தைக்கு பாதுகாப்பளிப்பதாகவும் இருக்கும்

முடியும். தாய், குழந்தையையும், தன்னையும் மாதத்திற்கு ஒருமுறை டாக்டரிடம் காட்டி, தானும், குழந்தையும் ஆரோக்கியமாயிருக்கிறார்களா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

தாய்ப்பால் சேய்க்கு மிகச்சிறந்தது. தாய்ப் பால் பரிசுத்தமானது. இயன்றளவு காலம் சேய்க்கு தாய்ப்பால் ஊட்டுவது நல்லது. சுகதேகியான தாய் தன் குழந்தைக்கு $1\frac{1}{2}$ அல்லது 2 வருடம் வரை அல்லது அதற்கு மேற்பட்ட காலமும் தாய்ப்பால் ஊட்டலாம்.



குழந்தை பிறந்ததும் தாய் நன்கு உணவருந்த வேண்டும். அவளுக்கு விசேட உணவு அவசியமில்லையெனினும், தினந்தோறும் மரக்கறி இலைவகைகளுடன் சாதாரண உணவை அதிகமாக சாப்பிடவேண்டும். அதனால் அவள் குழந்தைக்கு தாய்ப்பால் அதிகம் கொடுக்க

தாய் வீட்டிற்கு வெளியே தொழில் புரிய நேரிட்டால் அலுவலக நேரத்தில் சேய்க்கு தாய்ப்பால் ஊட்ட முடியாது. எனவே, தாய் வீட்டிலில்லாத நேரத்தில் பாலை போத்தல் மூலமாக பருக்கியும், வீடுவந்ததும் தாய்ப் பாலூட்டியும் சேயை வளர்க்க ஏற்பாடு செய்துகொள்ள வேண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். படிப்படியாக குழந்தையை தாய்ப் பால் ஊட்டுவதிலிருந்து விலக்கலாம். புட்டி மூலம் பால் பருக்கும் தாயின் புட்டியையும், பால் தயாரிக்கும் மற்றும் உபகரணங்களையும் சவர்க்காரம் கலந்த நீரால் கழுவி ஆவியில் அவித்தல் வேண்டும். இதன் மூலம் விஷக்கிருமிகளைத் தவிர்க்கவும், பரவுவதைத் தடுக்கவும் முடியும்.

சேய் 4 மாத வயதடையும் போது அதற்கு தாய்ப்பால் மாத்திரம் போதாது. தாய்ப்பாலிலுள்ள சத்துக்கள் இவ்வயதுக் குழந்தைக்குப் போதாது. இச்சந்தர்ப்பத்தில் குழந்தைக்கு மற்றும் உணவுப் பொருட்களை ஊட்ட ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுது குழந்தைக்கு தோடை எலுமிச்சை பப்பாசி போன்ற பழவர்க்கங்களின் சாற்றை பருக்கலாம். நசுக்கிய வாழைப்பழத்தையும் ஊட்டலாம். சஞ்சி குழந்தைக்கு நல்ல உணவாகும். தோடம்பழ, எலுமிச்சம்பழச் சாறு குழந்தைக்குத் தேவையான 'சி' உயிர்ச்சத்தை அளிக்கின்றது. அத்துடன் நோயைத் தடுக்கவும் உதவுகிறது. கண்பார்வையை அதிகரிக்கச்செய்ய பப்பாசியில் சத்துண்டு. தாய் வாரத்திற்கு பலமுறை பப்பாசியை ஊட்டவேண்டும். பப்பாசி வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கக் கூடிய, குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற பழவகையாகும்.

அரிசி சிறிதளவில் பயறு கொஞ்சம் கலந்து வறுத்து அரைத்து மாவாக்கி அதில் வெந்நீரையோ அல்லது சூடாக்கிய குளிர்ந்த நீரையோ விட்டு அதனை கழியாக்கிக் கொள்ளலாம். இதனை சேய்க்கு தேக்கரண்டியால் ஊட்டலாம்.

ஆரம்பத்தில் இத்தகைய உணவில் சிறிதளவையே ஊட்டவேண்டும் (ஆரம்பத்தில் மிகச் சிறிதளவேயாகும்.) படிப்படியாக குழந்தைக்கு ஏற்ற அளவு கூட்டிக் கொள்ளலாம். பெரும்பாலும் இவ்வித உணவை ஊட்டும் பொழுது குழந்தை அதைத் துப்பி விடலாம். முன் எடுக்காத ஆகாரமாகையால் அதன் உருசி குழந்தைக்கு புதிதாக இருக்கும். அதனால் அது துப்பிவிடும். ஆனால் தாய் அவ்வுணவை நிறுத்திவிடாது அது உணவை ஏற்கும் வரை கொடுத்து வர வேண்டும். பின்னர் குழந்தை அவ்வுணவை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளும்.

குழந்தைக்கு சிறிய வயிறே உண்டு. இதனால் அது சிறிதளவு உணவையே உட்கொள்ளும். தாய் குழந்தைக்கு போஷாக்குள்ள உணவை அளவாக ஊட்டவேண்டும். 6 மாதம் ஆகும் பொழுது நாளுக்கு நாலு, ஐந்து முறை உணவூட்டினால், அது ஆரோக்கியமாக வளர உதவியாயிருக்கும்.

குழந்தைக்கு ஆறு மாதம் ஆகும் பொழுது தாய் அதற்கு கஞ்சி, நன்கு பிசைந்த சோறு, பிசைந்த கிழங்கு, பருப்பு, கீரைவகை, முள் அகற்றிய பிசைந்த மீன், முட்டை, பழவகை என்பவற்றை ஊட்டலாம். குழந்தைக்கு ஊட்டும் உணவு வாசனைத் திரவியங்கள் இட்டு சமைக்கப் படாததாகவும் நன்கு களிபோன்று பிசைந்தும் இருக்க வேண்டும். உணவுப் பொருளை வாங்கும்பொழுது குழந்தை விரும்பும் உணவையே தெரிந்தெடுத்தல் வேண்டும்.

குழந்தை 2 வயதையடைந்ததும் அது தாய் சாப்பிடும் உணவின் அளவில் அரைவாசியை உட்கொள்ள வேண்டும். எனினும் அதனை நாளுக்கு நாலு, ஐந்து முறையில் ஊட்டவேண்டும். எனினும் படிப்படியாக குழந்தையை உணவு வேளைக்கு பழக்கிக் கொள்ளவேண்டும்.

குழந்தைக்கு சுகாதாரமான முறையிலேயே உணவைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். கை கழுவாது உணவைத் தயாரிப்பதோ, தூசு, ஈக்கள் படியவிடுவதோ கூடாது. இவ்வித உணவு குழந்தை நோய்வாய்ப்பட சந்தர்ப்பமளிப்பதுடன் வயிற்று நோய்கள் பரவவும் இடமளிக்கின்றது. உணவை தூசு படியாது ஈக்கள் மொய்க்காது மூடிவைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக்கு உணவு தயாரிக்குமுன் தய்மா கைகளை சவர்க்காரம் பூசி நீரில் கழுவிக் கொள்ள வேண்டும்.

எந்நேரத்திலும் நன்கு சவர்க்கார மிட்டுக் கழுவி, கரண்டி, தட்டம் என்பன வற்றை அவித்து உபயோகித்து பின்னர் கழுவி சுத்தமான துணியால் மூடிவைப் பதன் மூலம் நோய்க் கிருமிகள் பரவு வதைத் தடுக்கமுடியும்.

நீர்

வீட்டில் எல்லோரும் சூடாக்கி ஆற வைத்த நீரைப் பருகப் பழகிக்கொள்ள வேண்டும். சிறு வயதிலிருந்தே குழந் தைகள் சுத்தமான நீரைப் பருகப் பழக்கவேண்டும். உஷ்ண காலத்தில் குழந்தைகளுக்கு தாகம் ஏற்படுவதுண்டு. குழந்தைக்கு தாகம் ஏற்பட்டிருப்பதை சேய்க்குத் தெரிவிக்க முடியாதிருந் தாலும் அதற்கு ஒரு நாளில் பலமுறை நீர் பருக வேண்டியது அவசியமாகிறது. தாய் சுத்தமான முறையிலே பெறப்பட்ட நீரைச் சூடாக்கி வடிகட்டி மூடியுள்ள பாத்திரத்தில் ஊற்றி வைத்தல் வேண் டும். இந்நீரை குழந்தை மாத்திரமன்றி குடும்பத்திலுள்ள அனைவரும் குடிக்கப் பயன்படுத்தலாம். குழந்தை கோப்பை யில் அல்லது காண்டியில் நீரைப் பருகப் பழக்க வேண்டும். இன்றேல் குழந்தை புட்டியிலேயே குடிக்கப் பழகி விடும். குழந்தையின் கோப்பையை அல் லது கரண்டியை நாளைக்கு ஒருமுறை யாவது அவிக்க வழி செய்து கொள்ள வேண்டும்.

தாய் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்ட வேண்டியது அது பசித்திருக்கும் வேளை யில் மாத்திரமேயன்றி, இரவு பகல் அது அழும் எல்லா நேரத்திலுமல்ல. குழந்தை உணவு உட்கொள்ளுமுன் தாய்ப்பால் பருக்கக் கூடாது. அப்படிச் செய்தால் குழந்தையின் சிறுவயிறு நிரம்பி மற்ற உணவை உட்கொள்ள முடியாது போய் விடும்.

முறையாக குழந்தை வளரும் பொழுது அதன் நிறையும் அதிகரிக்கும். அவ்விதம் வளரும் பொழுது குழந்தையின் நிறை கீழ்க்காணும் விதமாக அமையும்:-

| வயது | | நிறை |
|---|---|---|
| மாதம் 3 இல் | — | 13 இறாத்தல் |
| மாதம் 6 இல் | — | 17 ,, |
| மாதம் 12 இல் | — | 21.5 ,, |
| மாதம் 18 இல் | — | 24 ,, |
| மாதம் 24 இல் | — | 26.5 ,, |
| மாதம் 30 இல் | — | 29 ,, |
| மாதம் 36 இல் | — | 31 ,, |
| மாதம் 42 இல் | — | 33 ,, |
| மாதம் 48 இல் | — | 36 ,, |
| மாதம் 54 இல் | — | 38 ,, |
| மாதம் 60 இல் | — | 40 ,, |

குழந்தையை அடிக்கடி சுகாதார நிலை யத்துக்கு கொண்டு செல்வதனால், சுகா தார ஊழியர்கள் குழந்தையை அடிக்கடி கவனிக்க வழியேற்படுகின்றது. குழந்தை யின் நிறை அதிகரிப்பு, 'ஏ' உயிர்ச்சத்துக் குறைவு என்பனவற்றை பரிசோதிக்க முடியும். மேலும், குறிப்பிட்ட காலத்தில் குழந்தைக்கு நோய்த்தடுப்புப் பரிகாரங் களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

**நோய்த் தடுப்புப் பரிகாரங்கள்**

குழந்தையின் ஆரோக்கிய நிலையைத் தெரிந்து கொள்ள குழந்தையை அடிக் கடி சுகாதார நிலையத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். குழந்தை மகப்பேற்று இல்லத்தில் பிறந்திருந்தால், குழந்தை யை வீட்டிற்கு எடுத்துச் செல்லுமுன் சயரோகத் தடுப்பு மருந்தான பீசிஜி ஊசி மருந்து ஏற்றப்படும். இந்த மருந்தை ஏற்றவில்லையெனில், குழந்தை பிறந்து 4 வாரங்களுக்குள் குழந்தையை சுகாதார நிலையத்துக்குத் தூக்கிச் சென்று பிசிஜி மருந்தை ஏற்றிக்கொள்ள வேண் டும்.

மூன்று மாதத்தில் குழந்தைக்கு தொண்டைக் கரப்பான், கக்குவான், ஏற்பு நோய்த்தடுப்பு ('ட்ரிப்பிள்') ஆகிய மூன்று நோய்த்தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படல் வேண்டும். இந்த ஊசி மருந்து மூன்று தடவை ஏற்றப்படவேண்டியதால் தாய் சுகாதார நிலையத்திற்குச் செல்லும் பொழுது இது சம்பந்தமாக அவதானமாயிருக்க வேண்டும். இரண்டாம் ஊசி முதலாம் ஊசியேற்றப்பட்டு 6—8 வாரங்கள் கழியும் வரை அதாவது 5 ஆம் மாதத்தில் ஏற்றப்படவேணடும். 3 ஆவது ஊசி 2வது ஊசியேற்றி 4 லிருந்து ஆறுமாதம் கழிந்தபின் அதாவது 9 லிருந்து 11 ஆவது மாதங்களுக்கிடையில் ஏற்றப்படவேண்டும். அம்மைப் பால் கட்டுதல் 6 லிருந்து 9 மாதங்களுக்கிடையில் நடைபெற வேண்டும்.

எப்படியிருந்த போதிலும் சில வேளைகளில் தாய் எவ்வளவுதான் கவனமாக நடந்து கொண்டாலும் எல்லாக் குழந்தைகளும் சில சந்தர்ப்பங்களில் நோய்வாய்ப்படுவதுண்டு. குழந்தையொன்று சுகயீனமுற்ருல், குழந்தையை டாக்டரிடம் காட்டி குழந்தையை எவ்விதம் கவனிப்பதென்பது குறித்து அறிவுரை பெற வேண்டும். குழந்தை காய்ச்சல் அல்லது பேதியினுல் அல்லது வேறேதேனும் நோயினுல் பீடிக்கப்பட்டாலும் டாக்டர் தடுத்தாலன்றி தாய்ப்பால் குழந்தைக்கு பருக்கப்பட வேண்டும். நோயுற்ற குழந்தைக்கு மேலதிக நீர் நாளைக்கு பல முறை பருக்கப்படவேண்டும். விசேடமாக வாந்தி எடுத்தால் அல்லது பேதியினுல் பீடிக்கப்பட்டால் குழந்தையின் உடலிலிருந்து நீர் பெருமளவு வெளிப்படுகின்றது. அப்பொழுது தனியே நீரைக் கொடுப்பதற்குப் பதிலாக சிறிதளவு உப்பையும், ஒரு கரண்டி சீனியை அல்லது கருப்பட்டியைக் கொஞ்சம் கலந்து பருக்குவது நல்லது. இதனை குழந்தை விரும்புவதோடு, அதிகளவு நீரைக் குடிக்கவும் விரும்பும்.

குழந்தை காய்ச்சல், கொப்புளிப்பான் போன்ற நோய்களினுல் பீடிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் குழந்தைக்கு மெல்லிய உணவையே ஊட்ட வேண்டும். உணவு கொடுப்பதை பூரணமாக நிறுத்தக்

121, POINT-P. RO ROAD
NALLUR, JAFFNA

கூடாது. குழந்தை சுகமடையும் சக்தியைப் பெறுவது உணவினுலாகும். பேதிநோயினுல் பீடிக்கப்பட்டால் மெதுவான உணவை டாக்டரின் அறிவுரைக்கேற்ப ஊட்ட வேண்டும். அதனுல் குழந்தை அதிகம் பலவீனமடைவதிலிருந்து தடுக்கப்பட முடியும்.

**சாதாரண சுகாதாரப் பாதுகாப்பு:**

தாய் எப்பொழுதும் குழந்தையின் விரல் நகங்களை வளராது வெட்டிவிடுவதால் நகங்களுக்கிடையில் அசுத்தம் சேர்ந்து நோய்பரவுவதைத் தடுக்கலாம்.

சிற்சில நோய்கள் பரவுவதற்கு காரணம் திருப்தியான சுகாதாரப் பாதுகாப்புகள் இல்லாமலிருத்தலாகும். வீட்டைச் சுற்றி குழந்தை அசுத்தப்படுத்த இடமளிக்கக் கூடாது. இதற்கென வேருெருதொரு இடம் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிள்ளைகள் விளையாடும் இடத்திற்கு அப்பால் மலசலம் கழிப்பதற்கு இடம் அமைக்கப்பட வேண்டும். படிப்படியாக குழந்தையை மலசல கூடத்தை உபயோகிக்கப்பழக்கவேண்டும்.

பெற்ருர் எப்பொழுதும் மனதில் வைத்திருக்க வேண்டிய ஒருவிடயம் யாதெனில் அவர்கள் பொதுவாக நோயற்றிருப்பதற்கு குழந்தைகள் பெறும் இடைவெளியை (2—3 வருடம்) ஏற்படுத்திக் கொள்வதாகும். அதிகம் பிள்ளைகளைப் பெற்று, அவர்களைப் பராமரிக்க முடியாமல் கஷ்டப்படும் நிலையிலிருந்து இதனுல் அவர்கள் தடுக்கப்படுவார்கள்.

பெற்ருர்கள் சில காய்கறிகளை தம் வீட்டுத் தோட்டத்திலே வளர்த்துக் கொள்ள ஊக்கம் காட்ட வேண்டும். போதியளவு இடவசதி இல்லாதவிடத்து பூச்சாடிகளில் அவற்றை வளர்த்துக் கொள்ளலாம். இக் காய்கறிகள் குழந்தைக்கு மாத்திரமன்றி, குடும்பத்துக்கும் உணவாகப் பயன்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் குழந்தைகள் சுபீட்சத்திற்கான வேலைத்திட்டங்கள்

அனைத்துலக குழந்தைகள் ஆண்டிற்கேற்றதாக பல வேலைத்திட்டங்களை இலங்கை மேற்கொண்டுள்ளது. திட்டமிடல் அமைச்சின் அனைத்துலக குழந்தைகள் ஆண்டுச் செயலகம் இவ்வேலைகளையெல்லாம் தொடர்பு படுத்தல், திட்டங்களைச் செயற்படுத்தல் போன்ற வேலைகளைச் செய்கின்றது. இவற்றிலடங்கும் சில வேலைத் திட்டங்கள் கீழே தரப்படுகின்றன:

## குழந்தைகளின் உரிமை

### 1. பெற்றாரின் உரிமைச்சாசனம்

*கல்வி அமைச்சு பெற்றாருக்கென உரிமைச் சாசனமொன்றைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. இதன் மூலம் சிறுவர்களின் நல்வாழ்வுக்கான ஒழுக்கக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்க பெற்றார்கள் பெரும் பொறுப்பை ஏற்கவேண்டியுள்ளது. இவ்வுரிமைச் சாசனத்தில் குழந்தைகளின் உரிமைகள் பற்றி மாத்திரமன்றி அவர்களால் ஆற்றப்படவேண்டிய கடமைகள் பற்றிய விடரங்களும் தரப்பட்டுள்ளன.*

### 2. சிறுவர் உரிமைச்சாசனம்

*இதனைத் தயாரிக்கும் பொறுப்பு சமூக சேவை அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வுரிமைச் சாசனத்தில் கீழ்க்காணுபவை எதிர்பார்க்கப்படுகின்றன:-*

(அ) *பாதுகாப்பு, பராமரிப்பு, புனர்வாழ்வு என்பவை தேவைப்படும் டலதரட்பட்ட பிள்ளைகளுக்கு தேவையான சேமநலன், சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றிற்கு வழிவகுத்தல்;*

(ஆ) *நிரந்தரமானதும், சுகம் நிறைந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப அவசியமான சிந்தனையையும், பழக்க வழக்கங்களையும், ஆசைகளையும் இளம் தலைமுறையினரிடையில் உருவாக்குதல்;*

(இ) *அனைத்து குழந்தை, சிறுவர் தலைமுறையினருக்கு அவர்களின் இயற்கையான ஆற்றலைப் பயன்படுத்த அரசினல் செய்யப்படும் சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ள வழிவகுத்தல்;*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) இளைய தலைமுறையினர், தேசிய அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க சந்தர்ப்பம் வழங்கலும், அதன்மூலமாக நாட்டிற்கு சுபீட்சத்தையும், செல்வத்தையும் பெற்றுக்கொள்ள இடமளித்தலும்;

இந்த சாசனம் தற்பொழுது சட்ட ஆணைக்குழுவினால் ஆராயப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

### 3. விதவை, அநாதைகள் சட்டம்

தற்பொழுது செயலிலுள்ள சட்டத்தின் படி விதவை அநாதைகள் சட்டத்தின் கீழ் வளர்ப்புக் குழந்தைகள் பயன்பெற முடியாதிருப்பதைத் திருத்தி அவர்களும் பயன் பெற வசதி செய்வதற்காக சமூக சேவை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

### 4. குழந்தைகளும் சட்டமும்

நீதி அமைச்சு அதன் கீழ் இயங்கிவரும் பல்வேறு திணைக்களங்களின் மூலமாக தகுதியான தேசிய செயலாற்று வேலைத் திட்டத்துக்கிணங்க செயலாற்ற முன் வந்துள்ளது. இதில்—

(அ) குழந்தை என்பது எவரைக் குறிக்கும்?

(ஆ) இலங்கையில் குழந்தைகள் சம்பந்தமான சட்டப்படியான நிலைமை யாது என ஆராயப்படுகின்றது. (குழந்தைகள் சட்டக் கோவைச் சுருக்கச் சட்டமூலமொன்றை ஆக்கும் நோக்கத்துடன் இது நடைபெறுகின்றது).

கீழ்க்காணும் விடயங்கள் சம்பந்தமாக இலங்கையில் நிலையை சீர் தூக்கிப் பார்த்தல்.

(அ) விவாகச் சட்டமும், குழந்தைகளும்;

(ஆ) பெற்றோர் மீது பிள்ளைகள் செலுத்த வேண்டிய கவனமும், குழந்தைகள் மீது பெற்றோர் செலுத்த வேண்டிய கவனமும்;

(இ) சிறுவர் நீதிமன்றம், தண்டச் சட்டக்கோவைக் குற்றங்களும், குழந்தைகளும் - பாலியிடையே நீதி பற்றிய எண்ணத்தை உருவாக்கவும், பாடசாலைப் பிள்ளைகளுக்கு அவர்களின் அன்றாட வாழ்க்கை சம்பந்தமான சட்டப்படியான நிலையைப் போதிப்பதற்கும் 'சட்டம்' என்ற தலைப்பில் சிறு நூலைத் தயாரித்தல்.

5. பாலியரின் உரிமைச் சாசனத்தை தேசிய மொழிகளில் பெயர்த்தல்.

கல்வி அமைச்சு பாலியரின் உரிமை பற்றிய உரிமைச்சாசனத்தை சிங்கள, தமிழ் மொழிகளில் மொழி பெயர்க்க நடவடிக்கை எடுத்துள்ளது.

## சுகாதாரம்

1. நோய் எதிர்ப்புச்சக்தியூட்டல்

குடும்ப சுகாதாரப் பிரிவு சயரோகம், கக்குவான், தொண்டைக்கரப்பன், ஏற்பு நோய், இளம்பிள்ளை வாதம், சைகுரி ஆகிய ஆறு நோய்களுக்கெதிராக பால் கட்டுவதன் மூலமாகவும், ஊசி மருந்து ஏற்றுவதன் மூலமாகவும் எதிர்ப்புச் சக்தியை பிள்ளைகளுக்கு ஏற்படுத்தல் தேசிய குடும்ப சுகாதார வேலைத்திட்டத்தின் ஓரம்சமாகும். இது சம்பந்தமாக இப்பொழுதே சுகாதார அமைச்சு சகல குழந்தைகளுக்கும் கட்டாயமாக நோய் எதிர்ப்புச் சக்தியை ஊட்ட வேண்டுமென பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தின் மூலமாக நீதிசார் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சுகாதாரத் திணைக்களத்தின் குடும்ப சுகாதார வேலைப் பிரிவின் தலைமையில் நாடளாவிய வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கும் பொழுது தொண்டர் தாபனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாக வெளி வேலை மட்டத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியை ஊட்டும் வேலைகள் செயற்படுகின்றன.

**2. ஆசிரியர்களை சுகாதார ஊழியர்களாகப் பயிற்சியளித்தல்.**

கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் ஆசிரியர்களை சுகாதார ஊழியர் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தைத் தயாரித்துள்ளது. 5—6 வயதுக் குழந்தைகளின் சுகாதார நிலைமையை பரீட்சிப்பதற்கும், அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் அவசிய பரிகாரங்களைச் செய்யவும், குழந்தைகளை சுகாதார வழிகளில் வாழப் பழக்கவும், நோய்த் தடுப்பு சம்பந்தமான கல்விப் போதனையை நடத்தவும் ஆசிரியர் மூலமாக நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

**கல்வி**

**1. வசதிகளற்ற பாடசாலைகள்**

கல்வி அமைச்சினர் பிரதானமாக அவர்களின் அனைத்துலக குழந்தைகள் ஆண்டு வேலைத்திட்டத்தில் தீவில் வசதிகளற்ற 2,500 சிறிய பாடசாலைகளின் பயனுக்காக திட்டம் தயாரித்துள்ளனர். ஐ. நா. குழந்தைகள் நிதியின் உதவியுடன் இப் பாடசாலைகளுக்கு அடிப்படைத் தேவைகள் சிலவற்றைப் பெற்றுக் கொடுக்க தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**2. பாடசாலைகளுக்குப் போகாத குழந்தைகள்**

கட்டாயமாக பாடசாலை செல்ல வேண்டிய ஆகக்கூடிய வயதெல்லையான 14 வயதுக்குக் குறைந்த குழந்தைகள் பெருந்தொகையானோர் வறுமை காரணமாக அல்லது வேறு காரணங்கள் நிமித்தம் பாடசாலைக்குச் செல்வதில்லை. 1976 ஆம் ஆண்டிலே 6—14 வயதுப் பிள்ளைகளில் 25 சதவிகிதமானோர், அதாவது 6,55,000 பிள்ளைகள் பாடசாலைகளுக்குப் போகவில்லை யென்றும், இவ் வெண்ணிக்கையில் சரிபாதியினர் எந்தப் பாடசாலைக்கும் போக முயலவில்லை யென்றும் தெரியவந்தது.

12 வயதுக்குக் குறைந்த சகல பிள்ளைகளுக்கும் குறைந்தது ஆரம்ப கல்வியையாவது பெற்றுக் கொள்ளக் கூடியதாக செயலாற்றும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க இதனுடன் சம்பந்தப்பட்ட எல்லா அமைச்சுகளுடன் இணைந்து ஒன்றிணைக்கப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**சமூக சேமநலன்கள்**

**1. பிள்ளை பராமரிக்கும் நிறுவனங்கள்**

கீழ்க்காணும் நிறுவனங்களைத் ஏற்படுத்தற்காக சமூகசேவை அமைச்சு தற்பொழுது நடவடிக்கை எடுத்துவருகின்றது.

(அ) அரசாங்க பாலர் இல்லங்கள் ஒவ்வொன்றிலும் போஷாக்கு மத்திய நிலையங்களைத் தாபித்தல். தற்பொழுது அரசாங்க பாலர் இல்லங்கள் ஏழு உண்டு. இவற்றில் பூரணத்துவமுள்ள போஷாக்கு நிலையங்கள் தாபிக்கப்படும். இந் நிலையங்கள் மந்த போஷாக்கினால் பாதிக்கப்பட்டுள்ளவையெனக் கைவிடப்பட்ட பாலர்களைப் பொறுப்பேற்று அவர்களுக்கு விசேட உணவுவகைகளை வழங்கும். இந் நிலையங்கள் சுகாதார அதிகார சபையுடன் இணைந்து செயற்படும்.

(ஆ) அரசாங்க பாலர் இல்லங்கள்—புதிதாக இரு அரசாங்க பாலர் இல்லங்களைத் தாபிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(இ) பாலர் செயலகம்—இப் பாலர் செயலகத்தினால் வழங்கப்படவிருக்கும் வசதிகளாவன:—

— உள நோய் சம்பந்தமான ஆலோசனைச் சேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சுகாதார எடுத்துக்காட்டு, பிரசார சேவைகள்-உணவு ஊட்ட நிபுணரொருவரும், சமூக சேம நலச் சேவை உத்தியோகத்தரொருவரும், பாலர்களைக் கவனிப்பது சம்பந்தமாக பயிற்சியளிப்பரொருவரும், பாலர்களைப் பராமரிக்கும் தாதியரும் இதில் அங்கம் வகிப்பர். இவர்கள் நாடெங்கிலுமுள்ள சகல பாலர் இல்லங்களிலும் குறிப்பிட்ட நேரசூசிக்கிணங்கச் சென்று இளம் தாய்மாருக்கு ஆலோசனை வழங்குவர். இதற்கு ஐ. நா. பாலர் நிதியிலிருந்து உதவி எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

(ஈ) வலுவிழந்த பாலர் இல்லங்கள் 1979 ஆம் அனைத்துலக குழந்தைகள் ஆண்டில் முன்னிட மளிக்கும் வேலைத் திட்டமாக வலுவிழந்த பாலர் இல்லங்கள் ஐந்தைத் தாபிக்கக் கருதப்பட்டுள்ளது.

## 2. புனர் வாழ்வு

(அ) அரசாங்க உதவி பெறுபவர்களின் குழந்தைகளுக்கு புனர் வாழ்வளித்தல் — தற்பொழுது அரசாங்க உதவி பெறும் விதவைகள் ஏறத்தாழ 35,000 பேர் உள்ளனர். 1979, சர்வதேச சிறுவர் ஆண்டின் பேரில் 2,000 பேருக்கு தையல் இயந்திரம், கைத்தறி இயந்திரம், விவசாய உபகரணங்கள் என்பனவற்றை வழங்கி அவர்களை சுயமுயற்சித் தொழில்களில் ஈடுபடுத்துவதன் மூலம் புனர் வாழ்வளிக்கும் வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தொழிற் பயிற்சி—சேம நல நிறுவனங்களிலுள்ள வலுவிழந்தோருக்கும், ஏனையோருக்கும் உள்ள வசதிகளை விஸ்தரிப்பதற்கும், அத்துடன் அவர்களுக்கு தொழில் ரீதியான பயிற்சி அளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உளப்பாதிப்புள்ள குழந்தைகளுக்கு தொழிற் பயிற்சியளிக்கும் மத்திய நிலையங்களில் வேலைத்தளம் அமைத்தல்.

## 3. சமூக அபிவிருத்தி

(அ) சனசமூக நிலையங்கள்: - பிரதேச மக்களின் வாழ்க்கைக்கென நல்ல சூழ் நிலையை ஏற்படுத்தவும், அவர்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்யவும் சன சமூக நிலையங்கள் செயல் படுகின்றன. இவ்வியக்கம் சம்பந்தமாக உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாண அமைச்சு செயலாற்றுகின்றது. மேலும் இவ்வேலைகளுக்கு சர்வோதயம் போன்ற இயக்கங்களின் உதவியும், ஒத்துழைப்பும் பெறப்படுகின்றது.

(ஆ) சேரிவாழ் மக்களின் நல்வாழ்வுக்கான சூழ்நிலையை உருவாக்குதல். இவ்வியக்கத்தின் கீழ் சேரிகளில் வாழும் பிள்ளைகளின் நிலையை உயர்த்தும் நடவடிக்கைகள் பலவற்றை உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாண அமைச்சு மேற்கொள்ளும்.

## 4. பொதுசனத் தொடர்புச் சாதனங்கள்

அரசாங்க அமைச்சு அனைத்துலக குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு தகவல், சுவரொட்டிகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திச் சேவை மூலமாக அனைத்துலக குழந்தைகள் ஆண்டு பற்றிய நடவடிக்கைகளைப் பிரசாரம் படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும். இவ்வமைச்சின் கீழுள்ள திணைக் களங்கள் மூலம் அனைத்துலக குழந்தைகள் ஆண்டு நிகழ்ச்சிகள் தொடர்பாக ஏற்பாடு செய்திருக்கும் வேலைத் திட்டங்களாவன:—

(அ) சர்வதேச சிறுவர் ஆண்டு பற்றி வானொலியில் நடத்தப்படும் பேச்சுகளும், நிகழ்ச்சிகளும்;

(ஆ) தகவல் திணைக்களத்தினால் அனைத்துலக குழந்தைகள் ஆண்டு தொடர்பாக திரைப்படம் தயாரித்தல்.

## 5. பொழுது போக்கு

(அ) 35 நூல் நிலையங்களைத் தாபித்தல். உள்ளூராட்சித் திணைக்களம் மூலமாக சகல உள்ளூராட்சி நிறுவனங்களிலுமுள்ள நூல் நிலையங்களில் பாலர் பிரிவு தாபிக்கப்படுதல் கட்டாயப்படுத்தப்படும்.

(ஆ) 25 விளையாட்டிடங்கள்—பரிசீலனை மூலமாக இவ்விளையாட்டிடங்கள் இருபத்தைந்தை நிறுவ வேண்டிய இடங்கள் யாவை யெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போதுள்ள விளையாட்டு மைதானங்களில் பாலர்களுக்கு அவசிமானவற்றை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) அரசதிரைப் படக் கூட்டுத்தாபனம் குழந்தைகள் ஆண்டு தொடர்பாக குழந்தைகளுக்கான திரைப்படம் ஒன்றைத் தயாரிக்க ஏற்பாடு செய்கின்றது.

## 6. காலசார நடவடிக்கைகள்

கலாசார அமைச்சு மற்றும் அமைச்சுகளின் ஒத்துழைப்புடன் (சிறப்பாக கல்வி அமைச்சின்) செயலாற்றவிருக்கின்ற நடவடிக்கைகளில் அனைத்துலக குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நாடெங்கணும் விழாக்கள் நடத்தல், குழந்தைகள் சார்பாக கல்விப் பிராந்தியங்களுக்கேற்ப இசை, நடனம், நாடக நிகழ்ச்சிகள் தயாரித்தல் என்பனவும் அடங்கும்.

## 7. கருத்தரங்குகள்

(அ) சமுக சேவைகள் அமைச்சு குழந்தை சேம நலன்கள், குடும்பச்சேவை, பிள்ளைகளின் முன்னேற்றம், பாடசாலைக்குச் செல்லவிருக்கும் பாலர்கள், பாடசாலை போகாதிருக்கும் குழந்தைகள் போன்ற தலைப்புகளிலும், மற்றும் கொள்கைபற்றிய தலைப்புகளிலும் கருத்தரங்குகளையும், கொழும்பிலும், மற்றும் மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்கின்றது. இக் கருத்தரங்குகளுக்கு தனியார் கழகங்களினதும், அனைத்துலக குழந்தைகள் ஆண்டு செயலகத்தினதும் ஒத்துழைப்பு கிடைத்திருக்கிறது.

(ஆ) தோட்டப் பிள்ளைகளைப் பராமரிக்கும் பிள்ளை மடுவங்கள் அரசிலும், தொண்டர் தாபனங்களிலும் உள்ள பாலர் இல்லங்கள் ஆகிய வற்றில் கடமையாற்றும் ஊழியர்களுக்காக விடுதி வசதியுள்ள பயிற்சி அளிக்கும் மத்திய நிலையத்தை நிறுவ, சமூகசேவை அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

## 8. ஆய்வு

அனைத்துலக குழந்தைகள் ஆண்டுச் செயலகத்தின் மூலமாக பிச்சைக்காரச் சிறுவர்கள், வலுவிழந்த சிறுவர்கள் சம்பந்தமான இரு ஆய்வுகள் தொடர்பு படுத்தப்படும். இவ்வாய்வுகளின் மூலம் இச்சிறுவர்களின் பிரச்சினைகளும், அவர்களுக்குச் செய்யப்படவேண்டிய சேவைகளும் ஆராயப்படும். மேலும் இச் செயலகம் மற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பாலர் சம்பந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்வுகளில் ஈடுபடும். தற்பொழுதே பாலர்களைப் பராமரிப்பதற்கான தேவைகள் பற்றிய ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**அரச தொடர்பற்ற நிறுவனங்களின் செயலாற்றுத் திட்டம்**

சர்வதேச சிறுவர் ஆண்டுச் செயலகத்தின் மூலமாக அரசதொடர்பற்ற நிறுவனங்கள் மூலமாக அரசதொடர்பற்ற நிறுவனங்களின் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளது. அரச தொடர்பற்ற சகல நிறுவனங்களும் அனைத்துலக குழந்தைகள் ஆண்டிற்கென உத்தேசித்துள்ள வேலைத் திட்டம் அல்லது திட்டங்களை செயலகத்திற்குச் சமர்ப்பித்துள்ளன. இவ்வேலைத் திட்டங்கள் 1979 ஆம் ஆண்டிற்குள் நிகழக்கூடியதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அது பற்றிய சுருக்கம் வருமாறு:—

1. <u>உள, உடல் வலு விழந்தோருக்குப் புனர் வாழ் வளித்தல்</u>— இவ்வேற்பாட்டின் முதலாவது நோக்கம், பலதரப்பட்ட வலு விழந்த பாலர்களையும், அவர்களின் விசேட தேவைகளையும் விளங்கிக் கொண்டு, அதன் பின்னர் அப்பிள்ளைகளைப் புனருத்தாரணஞ் செய்தல் அல்லது புனருத் தாரணஞ்செய்ய விசேட உபகரணங்களை வழங்குதல் அல்லது கட்டிட வசதியுள்ள தொழிற்சாலைகளை நிறுவுதலாகும்.

2. <u>சிறப்புரிமையற்ற குழந்தைகளின் சேம நலத்திட்டங்கள்</u> — கிராமப்புறங்களிலும் நகர்ப் பிரதேசங்களிலும் சிறப்புரிமையற்ற குழந்தைகளின் நன்மைக்கான திட்டங்களை பல நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ளன. பாடசாலை செல்லும் வயதடையாத பாலர்களுக்கு பாலர் பாடசாலை வசதிகள், மேலதிக உணவு வழங்குதல் போன்ற வேலைகள், நோய் எதிர்ப்பு வேலைகள் மூலமாக குழந்தைகளின் சமூக, கல்வி, சுகாதார, போஷாக்கு நிலைமையை அபிவிருத்தி செய்தலே இவ்வேலைத் திட்டத்தின் அபிலாட்சையாகும்.

3. <u>குடும்ப வாழ்க்கை பற்றிய கல்வி</u>— தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் கீழ்க்காணும் உடல், உளச் சுகாதாரத்திற்கு அவசியமான வற்றைப்பற்றிய கல்வியை ஊட்டுதல் இத்தகைய வேலைத்திட்டத்தின் இலக்காகும்.

   — இரு கர்ப்பங்களிடையில் இருக்க வேண்டிய ஓய்வுகாலம்.

   — தாய்ப் பாலூட்டல்

   — நிறை உணவு

   — நோய் எதிர்ப்புத்தன்மை

   — அன்பு, தயை என்பவற்றை விளங்கிக்கொள்ளல்.

   — நல்ல குழந்தைப் பழக்கங்களுக்கு அவசியமானவை— இது விசேடமாக சுகாதாரப் பாது காப்பு, சௌக்கியம் பற்றியதாகவிருக்கும்.

   இந் நிறுவனங்கள் மூலமாக தாய்மார்களையும், குழந்தைகளையும் இவ் வேலைத் திட்டங்களில் கலந்து கொள்ளச் செய்வதன் பயனாக அவர்கள் நல்ல வாழ்க்கையை நடத்துவதற்கு அவசியமான அறிவையும், உதவியையும் அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும்.

4. <u>நாடகம்</u>—பிள்ளைகளின் திறமைகள் என்னவென்பதை ஆசிரியர்களும், தாய்மார்களும் அறிந்து கொள்ளும் விதத்தில் ஓவியம், நாடகம், கவிதை என்பனவற்றை ஆக்கவும், சங்கீதத்தில் ஈடுபடுத்தவும் இந்நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கலாசார, சமுதாய விடயங்கள்— சர்வதேச சிறுவர் ஆண்டில் சிறுவர்களின் பொழுது போக்கிற்காக பரந்த வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படும். இதன் மூலம் கலாசார, இலக்கியத்துறையில் அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படும்.

6. பிரசார வேலை—புத்தகங்கள், சுவரொட்டிகள், மற்றும் பிரசார சாதனங்கள் மூலம் இச்சேவையை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

7. சமூக சேம நலன் — அரசாங்க தொடர்பில்லாத நிறுவன வேலைகளில் ஒன்றிணைப்பு ஏற்படுத்த கீழ்க்காணும் குழுக்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றன.

(அ) பொது சனத் தொடர்பும் பிரசார வேலையும்;
(ஆ) வலுவிழந்த பாலர்களின் சேமநலன்;
(இ) குடும்ப வாழ்க்கை பற்றிய கல்வி;
(ஈ) கல்வி, சமுதாய, கலாசார வேலைகள்;
(உ) ஆய்வும், கல்வியும்;
(ஊ) சட்டமும், குழந்தையும்

## "நான் வளர்த்த செல்லப் பசு"

பசு வளர்ப்பு எங்களுக்குப் புதிதல்ல. பரம்பரை பரம்பரையாக பல நூற்றாண்டுகளாக எங்கள் முன்னோரும் நாங்களும் பசுக்களை வீடுகளில் வளர்த்தே வந்துள்ளோம்.

பசுவைப் பாலுக்காக, பயனுக்காக வளர்த்தாலும், எங்களில் எத்தனையோ பேர் அதனைக் கொள்ளை அன்புடன் செல்லமாக வளர்ப்பார்கள். குடும்பத்தின் சுக துக்கத்தில் இந்தச் செல்லப் பிராணிக்கும் நிறையப் பங்கிருக்கும். இந்தப் பசு பெரியவர்களுக்குப் பங்காளியாகவும் பிள்ளைகளுக்குத் தோழியாகவும் விளங்கும்.

சில சமயங்களில் இந்தச் செல்லப் பசுவின் குணமும் நடத்தையும் மனிதரைப் போல், ஏன், மனிதரை வெட்கித் தலை குனிய வைப்பது போலவும் கூட அமைந்திருக்கும். அதன் அதிசய போக்கினை எங்களில் எத்தனையோ பேர் கவனித்தும், இரசித்தும், மற்றவர்களுக்குக் கதை கதையாகச் சொல்லியும் மகிழ்ந்திருப்போம்.

நீங்கள் பசு வளர்த்தால் அதுவும் செல்லமாக வளர்த்தால், உங்களது உண்மை அனுபவங்களையும் அவதானிப்புக்களையும் ''நான் வளர்த்த செல்லப் பசு" என்ற தலைப்பின் கீழ் சுமநலத்துக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்தது எனத் தேர்ந்து சுமநலம்" சஞ்சிகையில் வெளியிடும் கட்டுரை ஒவ்வொன்றுக்கும் இருபத்தைந்து ரூபா (25/-) பரிசு வழங்கப்படும். எழுதுவீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமத்துறையில் இளைஞர் பங்கு

சிறுவர்கள் என்றால் பொதுவாகப் பதினைந்து வயதுக்கு உட்பட்டவர்களையே குறிக்கும். இவ்விதழில் பல கட்டுரைகள் பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களையே மனதிற் கொண்டு எழுதப்பட்டுள்ள போதிலும் இக்கட்டுரை கமத்தொழில் முயற்சிகளில் ஈடுபடும் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட இளைஞர்கள் பற்றியதாகும்.

இளம் கமக்காரர் மன்றங்கள் ஏனைய சில நாடுகளிற் போல இன்னும் இந் நாட்டில் பூரண வளர்ச்சி அடையாத போதிலும் இத்தகைய மன்றங்களின் அவசியத்தை எல்லோரும் உணர்ந்திருப்பதுடன் கிராமப் புறங்களில் இவை நிறுவப்பட்டு வளர்ந்தும் வருகின்றன.

கண்டி மாவட்டத்திற்குச் சென்று இளம் கமக்காரர் மன்றங்களில் தீவிர பங்கு கொண்டு உழைக்கும் சில உறுப்பினர்களைப் பேட்டி கண்டோம். எங்களுக்குப் பேட்டி தந்த அத்தனை பேரும் 25 வயதுக்கு உட்பட்டவர்களே. இப்படியானவர்களே இளம் கமக்காரர் மன்றங்களில் உறுப்பினராகும் அருகதை பெற்றவர்கள்.

இளம் கமக்காரர் மன்றங்களில் உறுப்பினராக இருப்பதிலும் கிராம அபிவிருத்திப் பணிகள், கமச்செய்கை, சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் ஈடுபடுவதிலும் இளைஞர்கள் மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறார்கள்.

நாங்கள் ஹங்குராங்கெட்டை, தெல்தெனிய ஆகிய இடங்களைச் சூழவுள்ள பல கிராமங்களுக்கும் போய் இளம் கமக்காரர்கள் பலர் தங்கள் மன்றங்களின் சார்பில் பாதை அமைப்புப் பணிகள், கிராமச் சந்தைகளைக் கூட்டுவித்தல், வழிபாட்டு நிலையங்களை அமைத்தல் போன்ற பொதுப் பணிகள் பலவற்றில் எவ்வாறு ஆர்வத்துடன் உழைத்து வருகிறார்கள் என்பதை அவதானிக்க முடிந்தது. அவர்கள் இளைஞர்களாக இருப்பதால் புதுப்புது உத்திகளையும் வினைத் திறன்களையும் படிப்பதிலும், ஓய்வு நேரங்களில் கமம் தொடர்பான ஏதாவது பணிகளில் ஈடுபட்டு வருவாய் தேடுவதிலும் ஆவல் கொண்டுள்ளனர்.

• இளம் கமக்காரர் மன்றங்களில் ஆண் பெண் இருபாலாரும் அங்கம் வகித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்கத்தக்கது. இம்மன்ற உறுப்பினர் களில் பலர் இன்னும் பாடசாலைப் பிள் ளைகளாகவே இருக்கையில், சிலர் பாட சாலை வாழ்க்கையை முடித்துக்கொண்டு இளம் கமக்காரர் மன்றத்தின் துணையுடன் மரக்கறித் தோட்டம், கோழி வளர்ப்பு, பசு வளர்ப்பு, தேன் வளர்ப்பு போன்ற கருமங்களில் ஈடுபடுகின்றனர். இளம் கமக்காரர் மன்றங்களில் சிலர் அரசு நடத்தும் பல செயல்முறைக் கமத் தொழில் பாடசாலைகளுக்குச் சென்று பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சிகள் சில ஒரு வருடம் தொடக்கம் 6 மாதம் வரை நீடிக்கக்கூடியன. இளம் கமக்காரர் மன்றங்களின் எண்ணிக்கை நாட்டில் பெருகி இளைஞர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை பயப்பதற்கு இத்தகைய மன்றங் களைத் தோற்றுவித்தற்குப் பொறுப் பாகவுள்ளவர்கள் இளைஞர்களுக்கு ஊக்கம் காட்டி, ஆக்கபூர்வமாக வழிகாட்டுதல் அவசியமாகும். இளைஞர்கள் ஆரம்பத்தில் காட்டும் உற்சாகத்தைத் தக்கபடி வழி நடத்தி வளர்க்காவிடின், நாளடைவில் இளம் கமக்காரர் மன்றம் எதுவும் வலுவிழந்து செயலிழந்து பெயரளவில் மட்டும் இயங்கும் மன்றமாகிவிடும்.

**பேட்டி தந்தவர்கள்:**

அயராத ஊக்கமும் தளராத முயற்சி யுமுடைய அந்தப் பெண்ணுக்குப் பெயர் சுமணசிறி மெனிக்கா. அவரது தகப்ப ஞர் ஒரு கமக்காரர். தகப்பனாின் வயலில் ஏதாவது உதவி வேண்டியிருந் தால் மெனிக்கா தயங்காது போய் உதவுவார். நாற்று நடுதல், களை பிடுங்குதல், நெல் தூற்றுதல் போன்ற கம வேலைகளை இந்த யுவதி நல்லாக செய்வார்.

கேகாலை நகரிலிருந்து பத்துப் பன்னி ரண்டு மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஈரியவுல்ல என்ற கிராமத்தில் வசிக்கும் இருபத்து மூன்று வயதான இந்த மெனிக்கா ஏழு பிள்ளைகள் உள்ள ஒரு குடும்பத்தில் கடைக்குட்டி. அவரது நாலு அண்ணன்மாரும் இரண்டு அக்காமாரும் திருமணமாகித் தனிக் குடும்பம் நடத்துகிறார்கள். வயதான பெற்றோர்களையும் கவனித்துக் கொண்டு கோழி வளர்ப்பு, வீட்டுத் தோட்டம், தையல் போன்றவற்றையும் மெனிக்கா உற்சாகத்துடன் கவனிக்கிறார்.



சுமனசிறி மெனிக்கா

மெனிக்காவின் கிராமத்தில் அவர் உட்பட மூன்றே இளம் யுவதிகளுடன் **1976** ஆம் ஆண்டில் இளம் கமக்காரர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் அங்கம் வகிக்கின்றனர். மன்றத்தின் முதல் மூன்று உறுப்பினர்களும் நாலு மாத பயிற்சிக்கு வாகொல்லையிலுள்ள பண்ணைப் பயிற்சிப் பாடசாலைக்குச் சென்றனர். வீட்டுத் தோட்டம் செய்தல், பசு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, கனி மரம் வளர்த்தல், நாற்று மேடைகளைப் பராமரித்தல், தையல், போஷாக்கு போன்றவற்றில் பயிற்சி பெற்றனர். மெனிக்கா சிரேட்ட தராதரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், கைத்தறி நெசவுத் தொழிலிலும் சான்றிதழ் பெற்றுள்ளார்.

மெனிக்கா தமது வீட்டுக் காணியில் ஏறக்குறைய மூவாயிரம் ரூபா செலவு



இந்த யுவதி தக்காளிச் செய்கையில் ஈடுபட்டுள்ளார்

செய்து கோழிக்கூடு ஒன்று அமைத்து, கோழி வளர்க்கத் தொடங்கியுள்ளார். ஐந்து மாதங்களுக்கு முன்னர் "ரோடைலன்ட்" என்ற இனத்தில் ஒரு நாட் குஞ்சுகள் 200 வாங்கி வளர்க்கத் தொடங்கினார். இவற்றுள் இப்போது 170 குஞ்சுகள் பிழைத்துள்ளன. எல்லாக் குஞ்சுகளும் ஆரோக்கியமாகக் காணப்படுகின்றன. கோழி வளர்ப்பில் பயிற்சி பெற்ற மெனிக்காவின் முகாமைத் திறனும் இதற்கு ஒரு காரணம். மெனிக்காவின் குடும்பத்துக்கு கால் எக்கர் நெற் காணியே சொந்தமாகவுள்ளது. இதை விட ஒன்றேகால் எக்கர் வயலைக் குத்தகைக்கு எடுத்தும் செய்கிறார்கள். இதனால் அவர் குடும்பத்துக்கு வருடத்திலே 30 புசல் நெல் சாப்பாட்டுக்குக் கிடைக்கும். இதை விட அவர்களுக்கு 2 எக்கர் றப்பரும் 1 எக்கர் தென்னங் காணியும் உண்டு.

ஓய்வு கிடைக்கும் வேளைகளில் மெனிக்கா கழிவுப் புடைவைத் துண்டுகளைக் கொண்டு அழகான பொம்மைகள் செய்கிறார். தரமான இப்பொம்மைகளை விற்பனை செய்வதற்குப் போதிய வாய்ப்புக் கிடைப்பதில்லை என்பது மெனிக்காவின் முறைப்பாடு.


இக்கிராமத்தில் இளம் கமக்காரர் மன்றம் பலம் பெற்று வளர்வதற்கு மெனிக்கா உறுதுணையாக விளங்குகிறார். மற்ற உறுப்பினர்களும் அவரை முன் உதாரணமாகக் கொண்டு பூரண ஒத்துழைப்பு வழங்கி மன்றத்தை வளர்க்கிறார்கள்.

o o o

கொந்தெனிய என்பது கேகாலை மாவட்டத்திலுள்ள மற்றொரு கிராமமாகும். இதில் 48 குடும்பங்கள் வசிக்கின்றன. இங்கேயும் இளம் கமக்காரர் மன்றம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பதுடன் ஏறத்தாழ 42 இளைஞர்கள் அதன் தீவிர உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். எனினும் இதன் மொத்த உறுப்பினர் தொகை 115 ஆகவும் 15 வயதுக்குக் குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிவுடன் பசுவளர்க்கும் ஒரு பள்ளிச்சிறுமி

உறுப்பினர் எண்ணிக்கை 15 ஆகவும் உள்ளது.

சமையல்கூடம் கட்டுதல், மற்றும் வீடுகளிலுள்ள சிறு சிறு திருத்த வேலைகளைச் செய்தல் போன்ற பணிகளில் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் ஒத்தாசை புரிகின்றனர். இதே போன்று யுவர்கள் உழுதல், கொத்துதல் போன்ற கமவேலைகளிலும் யுவதிகள் களை பிடுங்குதல், நெல் அறுவடை செய்தல், அறுவடை செய்த கதிர்களைக் திரட்டிக் கொண்டு செல்லுதல் போன்ற பணிகளிலும் ஈடுபடுகின்றனர்.

அண்மையில் இக்கிராமத்தினர் $3\frac{1}{2}$ மைல் நீளமான பாசன வாய்க்காலைச் சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். இவர்களுள் முக்கால்வாசிப்பேர் இளம் கமக்காரர் மன்ற உறுப்பினரேயாவர்.

இவ்வுறுப்பினர்கள் மாதம் ஒரு முறை கூடும் ஒரு சந்தையையும் ஏற்பாடு செய்துள்ளார்கள். ஒவ்வொரு சந்தையிலும் ஏறக்குறைய ஐயாயிரம் ரூபா பெறுமதியான பலவித பண்டங்கள், மரக்கறி பழவகைகள், தயாரிக்கப்பட்ட உணவுவகைகள், வீட்டு உபகரணங்கள், உடுப்பு வகைகள்-விற்பனைக்குக் கொண்டுவரப்படுகின்றன. நல்ல தரமான பொருட்கள் இச்சந்தைக்கு வருவதனால் மற்றைய கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்து பொருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வாங்கிப் போகின்றனர். இதனுல் இக்கிராமத்து இளம் கமக்காரர் மன்றம் உற்சாகமடைகின்றது.


o o o

ஹங்குராங்கெட்டை என்னும் இடத்தில் இளம் கமக்காரர் மன்றம் ஒன்று அமைந்துள்ளது. இம்மன்றம் முதன் முதலாக 1964 ஆம் ஆண்டில் இமானுவல் என்ற கிறீஸ்தவ பாதிரியார் ஒருவரினுல் ஆரம்பிக்கப்பட்டமையால், அவரது நினைவாக இதனை இமானுவல் இளம் கமக்காரர் மன்றம் என அழைக்கிருர்கள். சில காலம் உற்சாகத்துடன் செயற்பட்ட இம்மன்றம் இமானுவல் பாதிரியார் புறப்பட்டதும் முடங்கிக் கிடந்ததாம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் மீளவும் இந்த மன்றம் துடிப்புடன் இயங்கத் தொடங்கியுள்ளது. இப்போது இதில் 52 இளைஞர்கள் அங்கம் வகிப்பதுடன், மரக்கறிச் செய்கை, பண்ணை மிருக வளர்ப்பு, தேனீ வளர்ப்பு போன்ற வற்றிலும் ஊக்கத்துடன் ஈடுபடுகின்றனர்.

நாங்கள் பார்த்த இளம் கமக்காரர் மன்றங்களுள் இங்குள்ள உறுப்பினரில் பலரே தேனீ வளர்ப்பில் ஈடுபடுவதைக் கண்டோம். இதற்கு இமானுவல் பாதிரியார் தமது மக்களுக்குத் தேனீ வளர்ப்பில் அளித்த ஆரம்பப் பயிற்சி ஒரு காரணம். இப் பகுதியில் மரக்கறிச் செய்கைக்கு நல்ல வாய்ப்பு இருப்பதனுல் இளைஞர்கள் பலர் அதில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். இதனுல் அவர்களுக்கு நல்ல ஆதாயமும் கிடைக்கின்றது.

o o o

தெல்தெனிய பகுதியில் செனரத்வில இளம் கமக்காரர் மன்றம் என ஒன்று 1976 தொடக்கம் இயங்கி வருகிறது. இதில் யுவர்களும் யுவதிகளுமாக 30 பேர் சம எண்ணிக்கையில் உறுப்பினராகவுள்ளனர். இவர்களுக்கு அரசு 20 எக்கர் நிலத்தைக் கமச்செய்கைக்கு வழங்கியுள்ளது. உறுப்



இமானுவேல் இளம் கமக்காரர் மன்ற உறுப்பினர் தங்கள் தேன் வளர்ப்பைக் கவனிக்கின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செனரத்வில இளைஞர் மன்ற உறுப்பினர் உழைக்கின்றனர்

பினர் ஒவ்வொருவரும் இதனைத் தமக்கிடையே சமமாகப் பிரித்து கத்தரி, போஞ்சி, மரவள்ளி, தக்காளி, வாழை போன்றவற்றைச் செய்கை பண்ணுகின்றனர். இவ்விளைஞர்கள் அனைவரும் 30 குடும்பங்கள் குடியேறியுள்ள செனரத்வில என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இக்குடும்பங்களிடையே நாங்கள் அவதானித்த ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் ஒவ்வொரு குடும்பமும் பாற்பசு வளர்ப்பில் முனைப்புடன் ஈடுபட்டிருப்பதாகும். தினமும் இக்குடும்பங்கள் மொத்தம் 200டை ந்து பாலைப் பாற் சபைக்கு வழங்கி வருகின்றன. அரசுக்குச் சொந்தமான விக்ரோறிய பண்ணை அண்மையில் இருப்பது இவர்களின் பாற்பசு வளர்ப்புக்கு ஒரு தூண்டுதலாக இருக்கலாம். இந்த அரச பண்ணை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஒரு வாலிபரை இக்கிராமத்திலிருந்து தேர்ந்தெடுத்து, பாற்பண்ணைத் தொழிலில் பயிற்சி கொடுப்பதுடன் படியாக மாதம் 200 ரூபாவும் கொடுக்கிறது. பயிற்சிக்குப் பின்னர் விக்ரோறியாப் பண்ணையில் வேலையிருந்தால் நிரந்தரமாக அவர்களுக்கு வேலையும் வழங்குகிறது.

இளைஞர்களின் ஆக்க சக்தியையும் ஆர்வத்தையும் ஏற்ற வழிக்குத் திசை திருப்பிப் பயன்படுத்த இளம் கமக்காரர் மன்றங்கள் துணை நிற்கும். இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள். எனவே தான் சிறுவர் விடயங்கள் பலவற்றை எழுதிய இவ்விதழில் இளைஞர் விடயம் ஒன்றையும் எடுத்தாண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேகாலை மாவட்டத்தில்

# வாழைச்செய்கை

> கேகாலை மாவட்டப் பிரதேசமும், மண்ணும் சுவாத்தியமும் வாழைப் பயிர்ச்செய்கைக்குப் பெரிதும் ஏற்றதாக இருப்பதால், இப்பகுதியில் இப்போது பலரும் வாழை பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். வாழைப் பழத்திற்கு நல்ல கிராக்கி நிலவுவதும், உடன் விலைபெறக் கூடிய வாய்ப்பு இருப்பதும், ஏனைய பயிர்களுடன் ஒப்பிடுகையில் வாழைக்கு அதிகம் உள்ளீடுகள் தேவைப்படாதிருத்தலும், நல்ல நிகர இலாபம் கிடைப்பதும் வாழை பயிரிடத்தூண்டும் மற்றைய காரணங்களில் முக்கியமானவையாகும்.

இம்மாவட்டத்திலே 1979 ஆம் ஆண்டின் முற்பகுதியில் 6,200 ஏக்கர் நிலம் வாழைச் செய்கைக்கு உட்பட்டிருந்தது. அவ்வருட இறுதியில் வாழைச் செய்கைப் பரப்பளவு 7,750 ஏக்கர்களாக அதிகரித்தது. கேகாலை மாவட்டத்தில் வாழைச் செய்கைக்கான குறியளவு பத்தாயிரம் ஏக்கர்களாகும். இதனை ஒரு வருடத்துக்குள் எய்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான வீட்டுத் தோட்டங்களிலேயே வாழை பயிரிடப்படுகிறது. இத்தகைய தோட்டங்கள் கால் ஏக்கர் தொடக்கம் ஆகக் கூடியது 8 ஏக்கர் பரப்பளவுக்கு உட்பட்டதாகவே இருக்கும். இப்படிக் காணி வசதி இல்லாதவர்கள்கூட தங்கள் வீட்டுச் சுற்றுப் புறத்தில் குறைந்தது 5 தொடக்கம் 15 வாழைக் கன்றுகளையாவது நட்டிருப்பர். அரசுக்குச் சொந்தமான பெருந் தோட்டங்களில் மொத்தம் நூறு ஏக்கர் காணியிலேயே வாழை பயிரிடப்பட்டுள்ளது. ஆயினும், இது நாளடைவில் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் ஆனை வாழையும் புளி வாழையுமே செழித்து வளர்கின்றன. இவை தவிர கறி சமைப்பதற்கான சாம்பல் வாழையையும் ஆங்காங்கே பயிரிடுகிறார்கள்.

வாழைச்செய்கை இங்கு முறைப்படி திட்டமிடப்பட்டிருப்பதுடன், வாழைச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்குப் பயிற்சி அளித்தல், செயல்முறை காட்டும்வாழைச் செய்கைக் காணித்துண்டுகளைப் பராமரித்தல், நேர காலத்திற்கு உரம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே வாழைச் செய்கை முறையில் ஏறக்குறைய ஆயிரம் பேர் வரையில் பயிற்றப்பட்டுள்ளனர்.

செயல்முறை காட்டும் வாழைச்செய்கைக் காணித் துண்டுகள் நூறு வரையில் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு காணித்துண்டிலும் 25 வாழைக்குட்டிகள் முறைப்படி நாட்டப்பட்டுப் பராமரிக்கப்படும். இவற்றை மற்றையோரும் பார்த்து செய்முறைகளைப் பழகிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதியில் வாழைக்குப் பெரும்பாலும் கொத்துமுனை அல்லது குருக்கன் என்ற நோயே ஏற்படுகிறது. இந்நோயைத் தடுக்கும் வழிவகைகளை கமவிரிவாக்க ஊழியர்கள் மக்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

வாழைக்குலைகளைச் சந்தைப்படுத்தல், வாழைச்செய்கைக்குத் தேவையான உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றில் உதவும் நோக்குடன் வாழைக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இச்சங்கம் உற்பத்தியாளர்களிடமிருந்து வாழைக்குலைகளை வாங்கி நுவரெலியா, குருநாகலை, கொழும்பு போன்ற இடங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்கிறது. வாழைச் செய்கைக்கு வேண்டிய கடனையும் இலங்கை வங்கியிடமிருந்து பெறுதற்கு இக்கூட்டுறவுச் சங்கம் உதவுகிறது. நன்கு முற்றாத வாழைக்குலைகளும் தரப்படுத்தாத குலைகளும் விற்பனைக்கு உருவதை இச்சங்கம் ஊக்குவிப்பதில்லை என்பதால், இங்கு வாழைக்குலைச் சந்தைப்படுத்தலில் ஒருவித கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் நிலவுகிறது.

**வாழை பயிரிடுவோருடன் நடத்திய பேட்டி:**

**திருமதி ஹத்துகொட ஏகநாயக்க**

''எனதுகணவர் அரச திணைக்களம் ஒன்றில் உயர் பதவி வகிக்கிறார். எங்கள் குடும்ப வருவாயைப் பெருக்குதற்காக நான் எங்கள் கமக் காணியில் பயிர்ச் செய்கைவேலையைக் கவனிக்கிறேன். எங்களுக்கு நான்கு பிள்ளைகள். அவர்களில் மூவர் பெண்கள்.

எங்களின் பத்து ஏக்கர் மேட்டு நிலத்தில் முக்கிய பயிராகத் தென்னையும் இடைப் பயிராக வாழை, கோப்பி, அன்னாசி ஆகியனவும் செய்கை பண்ணப்படுகின்றன.

வாழை பயிரிடுவதில் எனக்கு அதிக ஆர்வம் இருப்பதால் எட்டு ஏக்கர் மேட்டு நிலத்தில் வாழையைப் பயிரிட்டுள்ளேன். கேகாலையிலுள்ள கமத்

## வாழைச் செய்கை



**வாழை பயிரிடுவதில் கவனஞ் செலுத்தும் திருமதி ஹத்துகொட ஏகநாயக்க**

தொழில் விரிவாக்க உத்தியோகத்தர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 25வாழைக் கன்றுகளை நட்டு ஒரு செயல்முறைக் காணித் துண்டையும் பராமரித்து வருகிறேன். 1968 இல் எனக்கு முப்பது வயதிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திரு. ஜீ. பி. ரத்ஞயக்க

அப்போதிருந்து இன்றுவரை நான் தொடர்ந்து வாழை பயிரிட்டு வருகிறேன். இனிமேலும் பயிரிடவே செய்வேன். இந்தப் பயிருக்கு ஆட்கூலி அதிகம் தேவைப்படாது. எட்டு ஏக்கர் வாழைச் செய்கையைக் கவனிக்க ஒரு மாதத்திற்கு 15—20 கூலியே வேண்டியிருக்கும். நாட்கூலிச் சம்பளம் 15- ரூபாவாகும்.

மாதாந்தம் ஓர் ஏக்கரிலிருந்து 12—15 குலைகள் எனக்குக் கிடைக்கும். இவற்றின் விற்பனையினால் ஏக்கரிலிருந்து எனக்கு 300 ரூபா நிகர ஆதாயம் கிடைக்கும். ஓர் ஏக்கருக்கு உரமிட நான் 112 ரூபா செலவிடுகிறேன். இவற்றை வைத்துப் பார்த்தால் எனக்கு ஆண்டொன்றுக்கு ஏக்கரில் 1,500—1,700 ரூபா நிகர லாபமாகக் கிடைக்கும்.

சிறிய வியாபாரிகள் என் தோட்டத்துக்கு வந்தே வாழைக்குலைகளைச் சேகரித்துப் போவதனால் எனக்கும் விற்பனை செய்வது அதிக சிரமமில்லை.

ஆனை வாழை, கதலி வாழை அல்லது புளி வாழை இனங்களையே அதிகமாக என் நிலத்தில் பயிரிட்டுள்ளேன். அவையே இந்நிலத்தில் அதிகம் நோய்க்கு உள்ளாகாது வளர்கின்றன.

திருடர் தொல்லையே எனக்கு வாழைச் செய்கையில் உள்ள ஓரே ஒரு பெருந் தொல்லை.

நான் வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு, எங்கள் மேட்டு நிலப்பயிர்ச் செய்கைகளையும் கவனித்து குடும்ப ஆதாயத்தை ஓரளவு பெருக்கி நல்வாழ்க்கை நடத்த முடிகிறது என்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்''

**றம்புக்கணையைச் சேர்ந்த திரு. ஜீ. பீ. ரத்ஞயக்க**

'பாடசாலை அதிபராகப் பணிபுரிந்த நான் இரண்டு வருடங்களுக்கு முன்னரே ஓய்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றேன். அப்போதிருந்து வருவாய்க்காகவும் பொழுதுபோக்குக்காகவும் வாழைச் செய்கையில் ஈடுபட்டு வருகிறேன். றம்புக்கணை வாழைச் செய்கைக்குப் பெயர் பெற்ற பகுதி என்பதை நீங்களும் அறிவீர்கள்.

மொத்தம் $2\frac{1}{4}$ ஏக்கர் நிலத்தில் இப்போது வாழை பயிரிட்டு வருகிறேன். கப்பல் வாழை, கதலி வாழை, ஆனை வாழை சாம்பல் வாழை போன்ற இனங்களை நாட்டியுள்ளேன். கப்பல் வாழையடிகள் அதிகம் இல்லை. வீட்டார் சாப்பிடுவதற்காக மாத்திரம் சிலவற்றை நாட்டியுள்ளேன். கப்பல் வாழை நோயினால் அடிக்கடி பாதிக்கப்படுவதனால், அவ்வினத்தை அதிகம் பயிரிடுவதில்லை.

வாழைக் கன்றுகளை 2'x2'x2' அளவுள்ள குழிகளில் 12'x12' இடைவெளியில் நடுகிறேன். எனது காணியில் மொத்தம் 550 வாழையடிகள் உள்ளன. மாதாந்தம் நான் வாழைச் செய்கையிலிருந்து ஏறக்குறைய 250 ரூபா வரையில் உழைக்கிறேன். இந்தப் பகுதியில் நாள் ஒன்றுக்குச் சாப்பாட்டுடன் 10 ரூபா ஆட்கூலியாகக் கொடுக்கப்படுகிறது.

வாழைக் குலைகளைச் சந்தைப்படுத்துவதில் எனக்குக் கஷ்டம் எதுவும் இருப்பதில்லை. வாழைக் குலைகளைக் கமக்காரரிடமிருந்து வாங்கிச் சேர்த்துச் சந்தைக்குக் கொண்டு போகும் வியாபாரிகளே என்னிடம் வந்து வாங்கிப் போவார்கள். அவர்கள் எனக்கு நியாயமான உச்ச விலை தருவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

விரிவாக்க உத்தியோகத்தர்கள் தரும் ஆலோசனைப்படி வாழைக்கு உரமிடுவதில் பெரிதும் அக்கறை காட்டுகிறேன். இதனால் நல்ல பலன் இருப்பது எனக்குத் தெரிகிறது. வாழைப் பழத்திற்கு இப்போது நல்ல கிராக்கி நிலவுகிறது. இதனால் வாழை பயிரிடுவோர் நன்மை அடைவர்"



பழக்கடையில் வாழைப் பழத்துக்கே உயர்ந்த இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-[illegible] ROAD
NALLUR, [illegible]NA
No.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தினல் 29, ஜயந்தவீரசேகர மாவத்தை,
கொழும்பு 10-ல் உள்ள குணரத்ன அண் கம்பெனியில்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org